ஓம்
திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்
திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு கஉ	மெய்கண்டான் யாண்டு-எளஎ புரட்டாசித் திங்கள் 1933ஆம் செப்டம்பர்மீ—அக்டோபர்மீ	பரல் உ

திருவாசகம்

தேவ தேவன் மெய்ச் சேவகன் தென்பெ ருந்துறை நாயகன்
மூவ ராலு மறியொ ணாமுத லாய வானந்த மூர்த்தியான்
யாவ ராயினு மன்ப ரன்றி யறியொ ணாமலர்ச் சோதியான்
தூய மாமலர்ச் சேவ டிக்கணஞ் சென்னி மன்னிச் சுடருமே.

பதவுரை :—

தேவதேவன்—தேவர்களெல்லாருக்கும் தலைவனாகிய மகாதேவனும்,

தென் பெருந்துறை நாயகன்—அழகிய தலமாகிய திருப்பெருந்துறையில் வீற்றிருந்தருளும் ஆத்மநாதனும்,

மூவராலும் அறிஒணா முதலாய ஆனந்த மூர்த்தியான்—அயன் அரி உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளாலும் அறிய முடியாத முழுமுதற் கடவுளாகிய இன்ப உருவனும்,

யாவராயினும்—உலகில் எத்தகைய சிறப்புக்களை உடையவரா யிருப்பினும்,

அன்பர் அன்றி அறிஒணா மலர்ச்சோதியான்—அகப்பற்று புறப்பற்றுக்களை விடுத்துத் தனது திருவடிகளையே புகலாகப் பற்றியுள்ள மெய்யடியார்களுக்கு அவர்களது நின்மலமான தூயஉள்ளத்தில் அவர்களோடு இரண்டறக் கலந்து பேரொளியாய் உணரப்படுகிறவன் அல்லாமல் ஏனையோர்களுக்கு அறியமுடியாதபடி எல்லா உயிர்களுடைய உள்ளமாகிய தாமரை மலரில் பேரொளியாய் மறைந்து நிற்கப்பட்டவனும்,

மெய்ச் சேவகன்—யாவர்க்கும் மேலாம் அத்துணை அளப்பரும் பெருந்தன்மை யுடையனாயினும் எல்லா உயிர்களுடைய நலங் கருதி இடைவிடாது ஐந்தொழிற் பணிகள் செய்து வருகின்ற உண்மையான பணியாளனும் ஆகிய சிவபெருமானுடைய,

தூய மாமலர்ச் சேவடிக் கண்—பூக்கள்கொண்டு அடியார்கள் வழிபடுகிற தூய்மையும் பெருமையுமுடைய செவ்விய இரண்டு திருவடிகளாகிய மெய் அறிவானது

நம் சென்னி மன்னிச் சுடரும்—மீளா அடிமைகளாய் ஆட்பட்டுள்ள அடியார்களாகிய நமது தலைமேல் நிலையாக நின்று பேரொளி செய்து (பேரின்பம் தந்து) கொண்டிருக்கும்.

விளக்க உரை :—

இந்தப் பாட்டும் இதனுடன் சேர்ந்த ஒன்பது பாட்டுக்களும் மாணிக்கவாசக அடிகள் தாம், மானுட வடிவில் குரு வடிவாய்த் திருப்

பெருந்துறைக்கு வந்த சிவபெருமானல் ஞானதீக்கை செய்யப்பட்டு ஆட்கொண்டருளப்பெற்ற உடனே பாடிய பாட்டுக்கள். தீக்கை முடிவில் ஞான ஆசிரியருடைய திருவடிகள் தமது தலைமேல் வைக்கப்பெற்றதும் அதனல் தாம் அடையப்பெற்ற பேரறிவு விளக்கமும் பேரின்ப விளக்கமும் மாணிக்கவாசக அடிகளால் இப்பாட்டுகளிற் கூறப்படுகின்றன. ஞானசிரியன் திருவடிகளை மாணவகன் தலைமேல் வைத்தலானது தீ இரும்பைத் தன்னிறமாக ஆக்குதல்போல அவர் மாணவகனுடைய உள்ளத்திலுள்ள குற்றங்கள் முழுமையும் போக்கி அதனிடம் சிவம் விளங்கச் செய்து மாணவகனைத் தானக்கி உண்மை அடிமையாக விளங்குகிற அவனிடத்தில் ஆண்டானகிய தமது எண்குணங்களும் பதியச் செய்தலைக் குறிக்கின்றது. திருநாவுக்கரசு அடிகள் தாம் பாடிய திருநல்லூர்த் திருத்தாண்டகத் தேவாரப் பதிகத்தில் "நாறுமலர்த் திருவடியென் தலைமேல் வைத்தார் நல்லூரெம்பெருமானர் நல்லவாறே" என்றும், "நலங்கிளரும் திருவடி யென் தலைமேல் வைத்தார் நல்லூ ரெம்பெருமானர் நல்லவாறே" என்றும், "வானே ரினந்துருவி மணிமகுடத் தேறத் துற்ற வினமலர்கள் போத விழ்ந்து மதுவாய்ப் பில்கி நனைந்தனைய திருவடியென் றலைமேல் வைத்தார்' என்றும், திருவையாற்றுத் திருத்தாண்டகத் தேவாரப்பாட்டு ஒன்றில் 'பிரானய் அடி யென்மேல் வைத்தாய் நீயே' என்றும் பாடி அருளினமை காண்க.

தேவதேவன்—என்பதனல் உலகிலுள்ள எல்லா உயிர்களுக்கும் ஒப்பற்ற தலைவன் என்பது கூறப்பட்டது. இதனல் அருவ சிவத்தினது நிலை குறிப்பிடப்பட்டது.

தென்பெருந்துறை நாயகன்—அடிகள் தமக்குச் சிவபெருமான் மானுட வடிவில் ஞானசிரியனய்த் திருப்பெருந்துறைக்கு வந்து ஆண்டு அருள் செய்ததைக் குறிப்பிப்பார் தென் பெருந்துறை நாயகன் என்றார். உள்ளுறையாகச் சமயங்களெல்லாம் வந்து சேர்கின்ற முடிபிடமாகிய சைவ சமயத் தனி நாயகன் என்றும், எல்லா வுயிர்களும் பொருள்களும் தோன்றுதற்கும் ஒடுங்குதற்கும் இடமாகிய துறை என்றும் பொருள் கொள்ளலாம். "சைவ சமயத் தனிநா யகனந்தி" என்று திருமூலர் 1567-வது திருமந்திரத்தில் கூறி யருளினர். இதனல் உருவ சிவத்தினது நிலை குறிப்பிடப்பட்டது.

மூவராலும் அறிஒண ஆனந்தமூர்த்தியான்—ஒண்ண என்பது ஒண எனக் குறுகியது. ஒண்ணுதல் - இயலுதல், கூடுதல். அறி - முதனிலைத் தொழிற்பெயர். அறிஒண்ண - அறிதலை முடியாத அதாவது அறிய முடியாத. மாயாபுவனங்களிலிருந்து படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் செய்கின்ற மும்மூர்த்திகள் மாயா புவனங்களுக்கெல்லாம் அப்பாலாய் அவர்களுடைய முழுமுதற் கடவுளாய் இன்ப வடிவமான சிறப்பியலை (சொரூப இலக்கணத்தை) உடைய பரம்பொருளை அறியமுடியாது என்பார் மூவராலு மறியொண ஆனந்தமூர்த்தியான் என்றார். "இன்பதனை யெய்துவார்க் கீயுமவர்க்கு உருவம், இன்ப கனமாதலினலில்" என்று திருவருட்பயன் சிவபெருமானுடைய இன்ப வடிவத்தைக் கூறுதல் காண்க. இதனல் சுத்த சிவத்தினது நிலை குறிப்பிடப்பட்டது.

அன்பரன்றி அறிஒணமலர்ச் சோதியான்—மலர் என்பது இங்கே உள்ள

மாகிய தாமரை மலரைக் குறிக்கின்றது; "மலர்மிசை ஏகினன்" என்பதிற்போல. மலர்ச் சோதியான் - உள்ளமாகிய தாமரை மலர் மேல் எழுந்தருளி யிருக்கும் சோதியான்; ஏழாம் வேற்றுமைத் தொகை. சோதியான்-பேரொளியை உடையவன், ஆன்ம அறிவொளி யோடு கலந்து விளங்கும் பேரொளியை யுடையவன். "பருவஞ் சேருயிர்க்குத் துங்கவரன் ஞானக்கண் கொடுத் தருளினாலே சோதிக் குட் சோதியாய்த் தோன்றுவன...காணே" என்று சிவஞான சித்தி யார் கக-வது சூத்திரம் அ-வது பாட்டிற் கூறப்பட்டிருத்தல் காண்க. அன்பர் - அன்பினை உடைய அடியார்கள். அன்பு என்பது இங்கே ஒருவர் உயிர்ப்பற்று பொருட்பற்றுக்களைவிட்டு இறைவனிடத்திற் செய்யப்படும் பேரன்பு. இறைவன் உயிர்களுக்கு இடை விடாது செய்து வருகிற பேருதவிகளை ஒருவர் நேரே அநுபவத்தில் நினைப்பு மறப்பு மற்ற நிலையில் அறிந்து அதனால் இறைவன்மீது செய்யும் பேரன்பு. எல்லா உயிர்களிடத்திலும் விளங்கும் பேரொளி யானது மலத்தால் மறைப்புண்ட ஏனைய உயிர்களுக்கு விளங்காதாயினும் மலத்தினின்றும் நீங்கப்பெற்ற பேரன்புடைய அடியார்களுடைய சிவகரணமாய் மாறின தூய உள்ளத்தில் படலம் நீங்கப்பெற்ற கண்ணுக்கு ஞாயிற்றினொளி விளங்குதல்போல, விளங்கும் என்பார் யாவராயினு மன்பரன்றி அறியொணா மலர்ச் சோதியான் என்றார். மலர்ச் சோதியான் என்பதனால் தீவிரதர சத்திநிபாதம்பெற்ற அடி யார்கள் தூய உள்ளத்தில் விளங்குகிற இறைவனது பேரொளி நிறை வில் அடங்கி, பேரறிவு விளக்கம் பெறுதல் கூறப்பட்டது. மலர்ச் சோதியான் என்பது நிட்கள சிவத்தைக் குறிக்கிறது.

தூய மாமலர்ச் சேவடிக்கண்—தூய, மா என்ற அடைமொழிக ளிரண்டும் சேவடி என்ற சொல்லைத் தழுவுகிறது. தூய்மை - மலத்தொடர் பின்மையையும், மா - ஒப்பில்லாத உயர்வையும், இன்பத்தையும் குறிக்கின்றன. சேவடிக்கண் என்பது சேவடியாகிய கண்; கண் என்பது இங்கே ஞானக்கண்; அதாவது மெய் அறிவைக் குறிக்கிறது. செம்மை + அடி = சேவடி, நேர்மையான அடி; இறைவன் தன்னை நேர்மையாக நோக்கி அறிகிற அடியார்களுக்குத் தானும் நேர்மையாக அவரது அறிவு நிலைக்குத் தக்கவாறு அருள் செய்கின்றவன் ஆதலின் அவன் அடி சேவடி எனப்பட்டது. திருநாவுக்கரசு அடிகள் திரு வதிகை வீரட்டானத் திருத்தாண்டகத்தில் "......வஞ்ச வலைப் பாடொன்றில்லா அடி" என்று கூறி அருளினார்.

நம் சென்னி மன்னிச் சுடருமே—சென்னி என்பது தலையி லிருக்கிற பிர மரந்திரத்தைக் குறிக்கின்றது.........மெய்யறிவுப் பேரொளியானது பிரமரந்திர வழியாய் எப்பொழுதும் நிலைபெற்று விளங்கவும் அத னால் ஆன்ம ஒளி அந்தப் பேரொளி நிறைவில் அடங்கி நின்று இறைவ னுடைய எண்குணங்களும் விளங்கப்பெற்று நித்தியமானபேரின்பப் பெருவாழ்வு அடையப்பெற்ற அநுபூதி நிலையை அடிகள் நஞ்சென்னி மன்னிச் சுடரும் என்றருளினர். அப் பேரொளியாகிய மெய்யறி வானது இனித் தம்மைவிட்டு நீங்காது என்பார் மன்னிச் சுடருமே என்றார்.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

சமயமும் தத்துவமும் :
Religion & Philosophy

மும்மையாலுலகாண்ட மூர்த்தி

[திரு. T. P. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் M.A., B.L.]

ஆளுடைய நம்பி:—மூர்த்தி நாயனார் ஒரு சிவத் தொண்டர். ஆளுடைய நம்பி "மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்" எனப் பாடுவது இப் பெரியாரைப் பற்றித்தான். எனவே, பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே மூர்த்தி நாயனாருடைய திருப்பெயர் தமிழ் நாடெங்கும் முழங்கிக்கொண்டிருந்த தென்பதில் ஐயம் இல்லை. மூர்த்தி நாயனாருடைய வாழ்க்கையின் சிறப்பாவது யாது? நம்பிகளுடைய கண்ணெதிரே மும்மையால் உலகாண்டமையே முன்வந்து நிற்கின்றது. இவ் வுண்மையின் உயிராக மூர்த்தி நாயனார் உலவினர் என்பதை உட்கொண்டன்றோ, ஆளுடைய நம்பிகள், என்று மிறவாத தமது இன் தமிழ்ப்பாவாம் புகழுடம்பை இப் பெரியாருக்கெனப் படைத்துதவினர்! பின்வந்த நம்பியாண்டார் நம்பியார், இத் திருத்தொண்டத் தொகைக்கே விரிவுரை செய்ய வந்த போதும் வற்புறுத்தாது போன இப் பேருண்மையைக் கண்டுபிடித்துக் காட்டிய பெருமை ஆளுடைய நம்பிக்கே எல்லாவகையாலும் உரியதாகும்.

நம்பியாண்டார்:—அரையடியில் ஆளுடைய நம்பிகள் அடக்கி வைத்துப் பாடிய வரலாற்றை நான்கடிகளாக விரித்துப் பாடுகின்றார் நம்பியாண்டார் நம்பிகள்.

> அவந்திரி குண்டம ணுவதின் மாள்வனென் றன்றாலவாய்ச்
> சிவன்திரு மேனிக்குச் செஞ்சந் தனமாச் செழுமுழங்கை
> உவந்தொளிர் பாறையிற் றேய்த்துல காண்டவொண் மூர்த்தி
> நிவந்தபொன் மாட மதுரா புரியென்னு நீள்பதியே. [தன்னூர்

நாயனாரைப் புகழவந்த இப்பாடல், மற்றொன்று விரித்த லாகப் பாண்டிமண்டலச் சதகச் செய்யுளைப்போல மதுரையைப் புகழ்ந்து முடிப்பதை நாம் இங்குக் குற்றம் எனக் காட்டவில்லை. இவ்வாறு மதுரையினையும் மூர்த்தி நாயனாரையும் பிணைத்துப் பாடியதின் நுட்பத்தைச் சேக்கிழார் பெருமான் விரித்துரைக்கும் போது அவ்வழகைக் கண்டு அகமகிழ்வோம். மும்மையால் உல காண்டமை ஆளுடைய நம்பிகளின் கண்ணைக் கவர்ந்ததுபோல, கையையே அரைத்த செய்திதான் நம்பியாண்டாரின் காதைக் கவர்ந்தது. இதனையே இங்குக் குறிக்க விரும்புகின்றோம். நம்பி யாண்டார் தமது நூலில் அடியார்களின் வியத்தகு செயல்களையே முடிந்த முடிபாகக்கொண்டு பாடிப் புகழ்கின்றாராதலின் அந் நோக்கத்திற் கேற்பக் கை தேய்த்தலால் உலகாண்டமையையே பெரிதும் பாராட்டுகின்றார். பொதுமக்களின் மனதைக் கவர முன்வந்த அப் பெரியார் அவ்வாறு தான் பாடவேண்டி யிருந்தது.

வியத்தகு சேயல்கள்:—இப்போதும் பொதுமக்கள் "அற்புதங் கள்" என இக்காலத்தே வழங்கும் வியத்தகு செயல்களிலே அன்றோ நாட்டமாய் அலைகின்றனர்? பெரியவர் என்ற சொல்லைக் கேட்டதும் "உண்ணாதிருக்கின்றாரோ? நெருப்பை விழுங்குவாரோ? நீர்மேல் நடப்பாரோ?" என்று கேள்வி கேட்டுக் கணக்கண்டு அவ் வாறே நூற்றுத் திரித்துக் கயிறு கட்டிவிட்டு வானிடையே ஊசலாடுகின்றனர் அன்றோ? சம்பந்தரின் பெருமையை என்பைப் பெண்ணாக்கிய குடத்தில் அடைத்து மூடி விடுகின்றனர். அப்பரின் சிறப்பைக் கடலில் மிதந்துவந்த கல்லோடு கட்டிக் கடலில் அழுத்தி விடுகின்றனர். சுந்தரரின் உயர்வை, முன்னே யுண்ட சிறுவனைப் பின்னே கக்கிய முதலையின் வாய்க் கிரையாக்கு கின்றனர். எல்லோரும் எளிதில் எடுத்துக்காட்டும் இவ் வியத்தகு செயல்கள் இப் பெரியோர்கள் அனைவரும் இயற்கையை வென்ற இயல்புடையோர்கள் என்பதனை வற்புறுத்தும் அடையாளங்களே யாம். இயற்கையை எதிர்த்ததோடு கடவுளையும் கண்டு பாடிய ஓர் உண்மையும் உண்டு என்பதை நாம் மறத்தலாகாது. இவ் விரண்டில் எது சிறந்தது என்பதே கேள்வி! அதுதானுமன்றி, அவ் வியத்தகு செயல்களை அறிவதால் நமக்குப் பயன் என்ன? நம்பிக்கை விளைதற்கேற்ற நன்செய் நிலம் அவையே என மன் றாடுவார் சிலர். இவ் வரலாறுகளை நம்பாதவர்களும், இவற்றைப் பற்றிய பாடல்களை இடைச் செருகல் என்பவர்களும் இருக்கின்

ரூர்கள் அன்ருே? அத்தகையோர்களையும் அன்பு வலையிற் சிக்க வைப்பது அப் பெரியார்களது அருண் மொழிகளே யன்ருே? அருண் மொழிகளாம் அழகிய பாடல்களே வியத்தகு செயல்க ளனைத்தினும் வியக்கத்தக்கனவாம்.

வாழ்க்கையின் நோக்கம்:—அம்மட்டோ? பெரியோர்களது வரலாற்றை நாம் ஏன் ஓதுகின்ருேம்? உலகவாழ்க்கை எனும் மணற்காட்டில் அவர்களுடைய திருவடிச் சுவடுகள் நன்கு புதைந் துள்ளன. அவற்றைப் பின்பற்றி நடந்தாலன்றி அக் காட்டிலே நடந்து செல்ல வேறு வழியைக் காண்பது எங்ஙனம்? காலம் எனும் சுழற்காற்றுப் புயற்காற்ருய் அடித்துக் கொண்டேயிருக் கிறது. எத்துணையோ அடிச்சுவடுகள் மறைந்தொழிந்தன. ஆனுல் பெரியோர்களின் அடிச்சுவடுகள் மட்டும், கல்விற் பொறித்தாற் போல அழியாது திருத்தமாக விளங்குகின்றன. அவ்வடிச் சுவடுகள் அவர்களது நூலிலன்ருே பெரிதும் விளக்கம் பெற்று மின்னிப் பொலிகின்றன! சம்பந்தருடைய பாடல்கள் எத்தகைய உயரிய உண்மைகளை உணர்த்துகின்றனவோ, அவற்றையே அவ ருடைய வாழ்க்கையும் உணர்த்துகின்றதன்ருே? ஆகவே, அவ் வுண்மைகளையறிய அவருடைய பாடல்களை யன்ருே ஓதுதல் வேண்டும்? அவற்றை ஓதாதவரையில் என்பைப் பெண்ணுக்கிய வரலாற்றை ஓதுவதால் ஒருபயனும் இல்லை; அதுவரை அவ் வர லாற்றின் உண்மைப் பொருளைச் சேக்கிழார் பெருமான் அறிந் ததுபோல நாமறிய இயலாது. ஒருகால் பெண்ணுன வரலாறு பொய்யாய்ப் போனுலும் அவருடைய பாடல்களும் அவற்றி னிடையே மிளிரும் உயரிய கொள்கைகளும் பொய்யாய்ப் போவது என்று மில்லையாம்.

நம்பியாரின் உள்ளக்கிடை:—இதுபற்றியன்ருே இவ் உண் மையை உணர்ந்த ஆளுடைய நம்பிகள், அவ் வவ்வடியார்களின் அத் தகைய வியத்தகு செயல்களைக் கொண்டாடாது, இத்தகைய உய ரிய கொள்கைகளைச் சுட்டிக்காட்டிப் போற்றுகின்ருர். இவற்றை வற்புறுத்துவதே இவருடைய நோக்கமாகும். இந் நோக்க வேறுபாட்டை யுணர்ந்தாலன்ருே ஆளுடைய நம்பிகளது அரை யடியின் அருட்டிறத்தையும் அவரைப் பின்பற்றிப் பாடும் சேக் கிழாரது பல பாடல்களின் பொருட்டிறத்தையும் நாம் நன் குணர்ந்து துய்த்து மகிழக் கூடும். நம்பியாண்டாரும் ஆளுடைய

நம்பிகளும் சைவப் பெரியார்களாய்த் திருமுறையினுள்ளே புகுந்து நின்றாலும் நம்பியாண்டார் நம்பியாண்டாரே! ஆளுடைய நம்பிகள் ஆளுடைய நம்பிகளேயாம். கையை அரைத்த வரலாறு ஒருவகையால் நோக்குமிடத்துத் தற்கொலையின் வரலாறாக அன்றோ முடிகின்றது! எங்ஙாளும் தற்கொலையானது முடிந்த முடிபாவதில்லை யன்றோ? மும்மையா லுலகாண்ட வரலாறே முடிந்த முடிபேயாம். உயரிய நெறியிலே நின்று உலகனைத்தும் வாழ்வதன்றோ எல்லோராலும் போற்றத்தக்கது! அரசாட்சி யன்று பெரியாருடைய நோக்கம்; அவ்வாட்சியை நம்பியாண்டாரும் சுட்டுகின்றார். மும்மை நெறியாம் அருள்வழியே உலகம் செல்கின்ற தென்பதனையே பெரியோர் காணவும் கேட்கவும் மிக விரும்புவர். அந்த நற்செய்தியினையே உலகத்திற் கெடுத்துரைத்து வழிகாட்டுகின்றார் நம்முடைய நம்பிகள்.

நாவலர்குறிப்பு:—நம்பியாண்டார் கூறுவதனைத் தற்கொலை வரலாறு எனப் புறக்கணித்தலாகாது. பிறர் சாவ எண்ணுவதே பாறநெறி எனக் கூறுவதினும், நம்பியாண்டார் கூறுவது மிக மிகச் சிறந்ததன்றோ? ஆறுமுக நாவலர் என்ற தமிழ்ப் பெருந் தகையார் தம்முடைய "சூசனத்தில்" அரசன் ஆருகதசமயி ஆகி, சிவனடியார்களுக்கு இடுக்கண் செய்தலால் அவன் கீழ்வாழும் குடிகள் அப்பாமதப் படுகுழியில் வீழ்ந்து எரிவாய் நாகத்துக்கு இரையாதலையும், சைவத்து நிற்பாரும் அரசனால்வரும் இடுக்கண் மிகுதிபற்றி அச்சத்தினாலே சிவபுண்ணியங்கள் செய்யாது வாளா கெடுதலையும் கண்டு இரங்கியன்றோ, அதிபாதகனாகிய இவ்வாசன் இறப்ப, இப்பாண்டிநாடு சைவமன்னரைச் சார்வது எக்காலம் என்று இம் மூர்த்திநாயனார் வருந்துவார் ஆயினர். இதனால் இவரது இரக்கமுடைமை தெளிக. மெய்யுணர்வு உடையார்க்குத் தாம் பெற்ற பேறு உலகம் பெறுதல் வேண்டும் என்பதே உள்ளக் கிடக்கை என்க. "நான் பெற்ற வின்பம் பெறுக இவ்வையகம்" என்றார் திருமூல நாயனார்" என்று மூர்த்திநாயனார் வரலாற்றில் இக்குறிப்பை நாம் மனங் கொள்ளுமாறு வற்புறுத்தி எடுத்துக் காட்டுகின்றார். நாவலர் பெருமானாரது சொற்றொடரைக் கொண்டே மூர்த்திநாயனாரது வரலாற்றின் முடிந்தமுடிபு ஈதே எனப் பிறழஉணர்ந்து விரிவுரை நிகழ்த்துவாரும் உளர் அன்றோ? "அமண் ஆவதில் மாய்வன்" எனப் புறப்படுகின்றார் மூர்த்தி

நாயனார் என்று நம்பியாண்டார் பாடுகின்றார். "யான்மாய்வன்" என்பதனை "அரசன் மாய்க" என மாற்றிவிடுகின்றாராம் சேக்கிழார்.

"புன்மைச் செயல் வல்லமண் குண்டரிற்போது போக்கும்
வன்மைக் கொடும்பாதகன் மாய்ந்திட வாய்மை வேத
நன்மைத் திருநீற்றுயர் நன்னெறி தாங்கு மேன்மைத்
தன்மைப் புவிமன்னரைச் சார்வதென்று" என்று சார்வார்.

எனவரும் செய்யுளை எடுத்துக் காட்டுகின்றனர். தற்கொலைப் பழி நம்பியாண்டார் தலைமேல் வீழ்வதுபோகக் கொலைப் பழியே சேக்கிழார் தலைமீது வீழ்கிறது. கை கொண்டும் வாள்கொண்டும் சாவச் செய்தல்போல, வாய்கொண்டு சாவ உரைப்பதும் மனங்கொண்டு சாவ நினைப்பதும் தீமையே யன்றோ! "உள்ளத்தால் உள்ளலும் தீதே" என்பதன்றோ தமிழ்மறை!

ஐயம்:—"இவ்வாறோ முடிந்தது சைவம்" என நகையாடுவார் சிலர். "ஆளுடைய நம்பிகள் உயரிய கொள்கை சுட்டியதால் யாது பயன்? பழத்தைத் துய்த்தன்றோ பயனறிதல் வேண்டும்! நம்பியாரின் பாடற்கனி யுண்டார் கொலைவெறி கொண்டன்றோ திரிகின்றனர்! அழித்தற் கடவுளை வழிபடுவார் உலகழிதலையே மிகமிக விரும்புவர். ஈதன்றோ இயற்கை? விரை யொன்று விதைத்தால் சுரை யொன்று காய்க்குமோ! என்று விரித்துரைப்பார் சிலர். அன்பும் சிவமும் ஒன்றானால், சாவோ வாழ்வோ முடிபாவது? பிறர் சாவ நோற்பதோ பேரன்பாவது? தற்கொலையிலே முடிவதோ சைவமாவது? சாவே முடிவானால் சிவனும் சாதல் வேண்டும். "இறவாத இன்ப அன்பு" என்ற அருந் தமிழ்த்தொடரைத் தமிழ்க் குதவிய சேக்கிழாருமோ வாழ்ப் பாடாது சாவப் பாடுவார்?

மெம்னன் என்ற எகிப்தியர் கிறித்துபிறப்பதற்கு 1822 ஆண்டுகட்குமுன் எழுத்துக்களை முதன்முதலாகக் கண்டுபிடித்தார்.

o o o o o

நானூறாயிரம் புத்தகங்களைக் கொண்டிருந்த அலெக்ஸாண்ட்ரியன் நூல் நிலையம் கி. மு. 52-ல் எதிர்ச்சையாய்த் தீவாய்ப் பட்டது.

—கா. சிவ. க,

இலக்கண இலக்கியப் பகுதி
Language & Literature

பதிற்றுப்பத்து விளக்கம்

(பண்டித. திரு. அ. நடராஜபிள்ளை அவர்கள்)

(கக-ம் சிலம்பு, கூ-ம் பரல்- உசஅ-ம் பக்கத்தொடர்ச்சி)

(6) துயிலின் பாயல்

(கசு) பாட்டு

கோடுறழ்ந் தெடுத்த கொடுங்க ணிஞ்சி
நாடுகண் டன்ன கணைதுஞ்சு விலங்கற்
றுஞ்சுமரக் குழாஅந் துவன்றிப் புனிற்றுமகள்
பூணா வையவி தூக்கிய மதில
நல்லெழி னெடும்புதவு முருக்கிக் கொல்லு
மேன மாகிய நுனைமுரி மருப்பிற்
கடாஅம் வார்ந்து கடுஞ்சினம் பொத்தி
மரங்கொன் மழகளிறு முழங்கும் பாசறை
நீடினை யாகலிற் காண்குவந் திசினே
யாறிய கற்பி னடங்கிய சாய
லூடினு மினிய கூறு மின்னகை
யமிழ்துபொதி துவர்வா யமர்த்த நோக்கிற்
சுடர்நுத லசைநடை யுள்ள லுமரியள்
பாய லுய்யுமோ தோன்ற லுவின்று
திருமணி பொருத திகழ்விடு பசும்பொன்
வயங்குகதிர் வயிரமோ டுறழ்ந்துபூண் சுடர்வர
வெழுமுடி கெழீஇய திருஞெம ரகலத்துப்
புரையோ ருண்கட் டுயிலின் பாயல்
பாலுங் கொளாலும் வல்லோய்நின்
சாயன் மார்பு நனியலைத் தன்றே.

பதவுரை

[14. தோன்றல் 14] [1 கோடுறழ்ந் தெடுத்த கொடுங்க
ணிஞ்சி நாடுகண் டன்ன கணைதுஞ்சு
விலங்கற் றுஞ்சுமரக் குழாஅந் துவன்றிப்
புனிற்றுமகள் பூணு வையவி தூக்கிய
௫. மதில,

தோன்றல் - அரசனே, கோடு உறழ்ந்து - மலையுள்ள விடங்களிலே அம் மலைதானே அரணாகவும் மலையில்லாத விடங்களிலே மதில் அரணாகவும் மலையோடு மாறுடும்படி, எடுத்த - கட்டப்பட்ட, கொடுங்கண் - வளைந்து கண்கள் போன்ற தோற்றத்தினைக் காட்டும் வாயிலோடு கூடிய, இஞ்சி - புறமதிலையும், நாடு - வளமிக்க நாட்டினை, கண்டு அன்ன - கண்டாற் போன்று வயல்களும் குளங்களு மிக்கு, கணை துஞ்சு - அம்புக் கட்டுகள் நிறைந்த, விலங்கல் - மலைபோன்ற இடைமதிலையும், துஞ்சு மரக்குழாம் - கடக்க முயல்வாரைச் சாவச் செய்யும் கழுக் கோல்களாகிய மரக் கூட்டங்கள், துவன்றி - நெருங்கி யிருக்கப் பெற்று, புனிற்று மகள் - ஈன்றணிமை கொண்ட பெண்மகள், பூணா - அணிய வியலாத, ஐயவி - துலாமரம், தூக்கிய - கதவிற்குக் காவலாக வாயிலின் உட்புறத்திலே தூக்கி விடப்பட்ட, மதில - உண்மதிலையுமுடைய பகைவரின் கோட்டையின் கண்ணே யுள்ள,

நல்லெழி னெடும்புதவு முருக்கிக்
கொல்லு மேன மாகிய நுனைமுரி
மருப்பிற் கடாஅம் வார்ந்து கடுஞ்சினம்
பொத்தி மரங்கொன் மழகளிறு முழங்கும்
பாசறை நீடினை யாகலிற் காண்குவந்
௧௦. திசினே,

நல் எழில் - நன்கு அழகுபெற வியற்றிய, நெடும்புதவு - பெரிய கதவுகளை, முருக்கி - உடைத்து, கொல்லும் - அழிக்கும் படியான, ஏனம் ஆகிய - கருவியான, நுனை - நுனிப்பாகம், முரி - சிதைந்துள்ள, மருப்பின் - கொம்புகளோடு கூடி, கடாம் - மத நீர், வார்ந்து - வழியப் பெற்று, கடும் - கொடிய, சினம் - கோபம், பொத்தி - நிறைந்து, மரம்கொல் - மரங்களை வேருடன் களப்பி வீழ்த்தும், மழகளிறு - இளமையான ஆண்யானைகள், முழங்கும் -

பிளிறும்படியான, பாசறை - படைவீட்டினிலே, நீடினை - நினது தலைவியை விட்டுப் பிரியுங்காலத்துக் குறிப்பிட்ட காலவளவுக்கு மேலே நீட்டித்துத் தங்கினாய், ஆகலின் - ஆகையாலே, காண்கு - நின்னைக் கண்டு நினது தலைவியின் நிலைமையினைக் கூறுவதற்காக, வந்திசின்- வந்தேன், ஏ இசைநிறை.

யாறிய கற்பி னடங்கிய
சாய லூடினு மினிய கூறு
மின்னகை யமிழ்துபொதி துவர்வா யமர்த்த
நோக்கிற் சுடர்நுத லசைநடை யுள்ளலு
முரியள் 13]

ஆறிய - அமைதியாகிய ஒழுக்கத்தாற் சிறந்த, கற்பின் - கல்வியினையும், அடங்கிய - அடக்க குணத்தாற் சிறந்த, சாயல் - அழகினையும், ஊடினும் - ஊடற்காலத்திலும், இனிய - இன்பமாகிய கருத்துக்களை, கூறும் - எடுத்துக் காட்டும், இன்நகை - இனிய பற்களையும், அமிழ்து - தேவாமிர்தம் போன்ற மொழிகள், பொதி - நிரம்பிய, துவர்வாய் - பவளம் போன்ற வாயினையும், அமர்த்த - ஆராய்வுகள் பலவற்றை யுள்ளடக்கிய, நோக்கின் - பார்வையினையும், சுடர் நுதல் - பிறையினைப் போன்ற நெற்றியினையும், (கொண்ட) அசைநடை - அன்னம் போன்று அசைந்து நடக்கும் நடையினையுடையாளாகிய நினது தலைவி, உள்ளலும் உரியள் - குறித்த காலவளவுவரை நின்னேவற்படியே ஆற்றியிருந்து இப்பொழுது நின்னை நினைத்து வருந்துதற்கு முரியளாயினள்,

[16 பூண் 16] [14 தாவின்று திருமணி
கரு. பொருத திகழ்விடு பசும்பொன் வயங்குகதிர்
வயிரமோ டுறழ்ந்து 16] [16 சுடர்வா வெழுமுடி
கெழீஇய திருஞெம ரகலத்துப் புரையோ
ருண்கட் டுயிலின் பாயல் பாலுங்
கொளாலும் வல்லோய்நின் சாயன் மார்பு
உ0. நனியலைத் தன்றே 20] [14 பாய லுய்யுமோ 14]

பூண் - ஆபரணத்தில், தா - வலி (கெட்டித்தன்)மை, இன்று - இன்மையாலே, திருமணி - அழகிய மணிகளுடனே, பொருத - சேர்த்து அணிகள் இயற்றுதற்குத் தகுதியாக, திகழ் - ஒட்டற்ற ஒளியினை, விடு - வெளிவிடுகின்ற, பசும்பொன் - கிளிச்சிறையெனப்

பெயர் பெற்ற பொன்னானது, வயங்கு - விளங்குகின்ற, கதிர் - சுடர்க்கொடிகளை யுடைய, வயிரமோடு - வயிரமணிகளுடனே கூடி, உறழ்ந்து - மாறுபட்டு, சுடர்வா - ஒளியினை வீசும்படி, (அமைக்கப் பட்டுள்ள), எழுமுடி - எதிர்த்த ஏழு அரசர்களின் ஏழு மகுடங்களாகிய மாலையானது, கெழீஇய - பொருந்திய, திரு - இலக்குமி, ஞெமர் - எழுந்தருளியுள்ள, அகலம் - நினதுமார்பாகிய, புரையோர் - குலமகளிராகிய நினது காதலியர், உண் - நின்னலனை யுண்டு, கண்துயில் இன் - கண்ணுறங்குதற்கினிய, பாயல் - படுக்கையினை, பாலும் - வேற்றுப்புலஞ் செல்லவேண்டாக் காலத்திற் காதலியர்க்குப் பகுத்துக் கொடுத்தலினும், கொளாலும் - வேற்றுப் புலஞ் செல்லவேண்டிய காலத்திற் காதலியர்பாலிருந்து வாங்கிச் செல்லுதலினும், வல்லோய் - திறமைமிக்கவனே, நின்சாயல் மார்பு - நினது அழகிய மார்பு, நனி - மிகவும், அலைத்தன்று - தலைவியைவருத்தியது, பாயல் - தனிமையான படுக்கையிடத்தே, உய்யுமோ - அவள் தனியே இருந்து பிழைப்பளோ? பிழைக்காள்.

(தொடரும்)

பாவினம்

[வித்வான். திரு. G. தேவநேசன் அவர்கள்]

(௩௫௮-ம் பக்கத் தொடர்ச்சி)

மண்டலம், வட்டமென்னும் சொற்கள் Circle என்னும் ஆங்கிலச் சொற்போல இடப்பகுதிகளையுங் குறிக்கும்.

"ஜயங்கொண்ட சோழமண்டலம்"

"இந்தவட்டத்திற்குள் அவற்கெதிரில்லை"

வட்டமென்பது வட்டகை வட்டாரமென்றுந் திரியும். மருத்துவ முறையில் நாற்பத் தெண்ணாட் பகுதி ஒரு மண்டலமெனப்படும். காலமுமிடத்தோ டொக்கும்.

இனி, மண்டலம், வட்ட மென்னும் சொற்கள் முழுமைப் பொருளினும் வழங்கும். திங்கள் வட்டமாயிருக்குங்கால் பதினாறு கலைகளும் நிரம்பியிருத்தல் காண்க. ஆங்கிலத்தும் round என்னும் சொல் whole, complete எனப் பொருள்படும். உலகவழக்கில் முழுமைப் பொருளில் 'வள்ளிது' என்றோர் சொல் வழங்கி வருகின்றது. அது வட்டம் என்னும் சொல்போல வள் என்னும் பகுதியினின்று பிறந்ததாகும். வள்ளிதாய்ச் செலவாயிற்று

என்றால் முழுதும் செலவாயிற்றென்பது பொருள். வள்ளிசாய் என்பது கொச்சைப் போலி.

மண்டலம் என்னுந் தொகைச்சொல், மண் + தலம் என விரியும். பண்டைத்தமிழர் கடற்செலவில் தேர்ந்திருந்தாராதலின், உலகெங்கும் கலத்திற்சென்று நிலம் வட்டமாயிருத்தலை நன்கறிந்திருந்தனர். பண்டையுலகத்தை ஏழ் தீவாகப் பகுத்துக் கூறினதும் இதை வற்புறுத்தும். தீவு—கண்டம். வடவைக்கனலை (Aurora Borealis) அறிந்திருந்ததும் மற்றோராதாரம். இலத்தீன் (Latin) ஆங்கிலம் முதலிய மொழிகளிற் கடற்றுறை பற்றிய சொற்கள் பல செந்தமிழாயிருப்பதும் இதற்குச் சிறந்ததோர் சான்றாம்.

நாவாய்	...	L. Navis. Eng. Navy = கடற்படை.
கலம்	...	Eng. Galleon
வாரணம்	...	L. Marina. Sans. வருண
கரை	...	Eng. Shore. sh = க
படகு	...	Eng. Bark. r = d. c. f. Coorg = குடகு
கட்டுமரம்	...	Catamaran
சோழி	...	Shell
நங்கூரம்	...	Anchor
கப்பல்	...	Ship

இது நிற்க. இனி நாற்சீரால் நிரம்பிவரும் அளவடியை மண்டில யாப்பென்றார்.

"நாற்சீர்கொண்ட தடியெனப்படுமே" என்பது சூத்திரம். இதனால் இயற்சீரால் துள்ளலிசைபற்றி அளவடி நான்காய்த் தனித்து வருங் கொச்சகக்கலியுறுப்புக் கலிமண்டிலமாயிற்று. மண்டிலம் பிற்காலத்தில் விருத்த மென்னும் வடமொழிப் பரியாயப் பெயரால் வழங்கலாயிற்று. ஆகவே துறை, தாழிசை, விருத்த மென்னும் மூவகைப் பாவினமும் கலிப்பாவானமை பெறப்பட்டது. இவற்றைப் பிற்காலத்தார் பொதுவாகக்கொண்டு, வரம்பு கடந்து வரூஉம் கொச்சகக் கலிகளையெல்லாம் ஒருபுடையொப்புமை பற்றி ஒவ்வோர் பாவிற்கும் மும்மூன்றினமாகப் பகுத்துரைத்தார்.

கலிப்பாப் பலவகையடிகளானும் உறுப்புக் குறைந்தும் மிக்கும் வருமென்பது முன்னரே கூறப்பட்டது. அதினுங் கொச்

சகக்கலியோ கலிப்பாவிற் கின்றியமையாத துள்ளலிசையுங் கெட்டு வருவதாகும். கலித்தல் - துள்ளல்.

இரண்டடி அளவொத்துச் செந்துறைப் பாடாண் பாட்டாய் வருவதை அடித்தொகைபற்றிக் குறட்கினமாக்கி வெண்செந் துறை யென்றனர்.

உ-ம் "ஆத்திசூடி யமர்ந்த தேவனை
ஏத்தியேத்தித் தொழுவோம் யாமே."

3 அடிமுதல் 7 அடிவரை முன்நீண்டு பின்குறுகிவரும் செந் துறைப்பாடாண் பாட்டை ஈறு குறைதல்பற்றி வெண்பாவிற் கின மாக்கி வெண்டுறை என்றனர்.

4 அடியாய் எருத்தடி நைந்தும், குட்டம் பட்டும், இடை மடக்கியும் ஆசிரிய வியலான் வரும் செந்துறைப் பாடாண்பாட்டை ஆசிரியத்துறை யென்றனர். இடைமடக்கல் அம்மானைக் கியல் பென்க.

கோவையில்வரும் கலித்துறைச் செய்யுளை எழுத்தெண்ணிக் கட்டளைக் கலித்துறை யென்றனர்.

குறளடி நான்காய் வரும் செந்துறைப் பாடாண்பாட்டை அடிவகைபற்றி வஞ்சித்துறை யென்றனர்.

கலிப்பாவில் அம்போதரங்க வுறுப்புச் சிந்தடி குறளடிகளும் பெற்றுவரும்.

இனித் தாழிசைக்குச் சிறப்பிலக்கணம், தாழம் பட்ட ஓசை யாய் அளவொத்து மூன்று அடுக்கிவருதல். இரண்டடியாய் இறுதியடிகுறைந்து வருவதைக் குறட்டாழிசை யென்றும், மூன்றடியாய் ஈற்றடி சிந்தடியாய் வருவதை வெண்டாழிசை யென்றும், மூன்று கோடியாய் அளவொத்து மண்டில வாசிரியம் போல் வருவதை ஆசிரியத்தாழிசை யென்றும், குறளடி நான்காய் வருவதை வஞ்சித்தாழிசை யென்றுங் கூறினர். இவையெல்லாம் ஒருபொருண்மேல் மூன்றடுக்கியும் தனித்தும் வருவனவாம்.

இனி, விருத்தத்திற்குச் சிறப்பிலக்கணம் அளவொத்த நாலடி யாய் மண்டலித்து வருதல்; அதாவது நிரம்பி வருதல்.

3 அடியாயும் 4 அடியாயும் மண்டலித்து வெண்பாவியலிற் றனிச் சொற்பெற்று வருவதை வெளி விருத்த மென்றும், கலி விருத்தமும், கலித்துறையும் அளவடியாயும் நெடிலடியாயும் வருத

லின் அவற்றுக்குமேல் கழிநெடிலடியாய் ஆசிரியத் தளைதட்டு வருவதை ஆசிரிய விருத்தமென்றும், வஞ்சிப்பாவிற்கு நிரம்பின அடி சிந்தடி யாதலின் சிந்தடியாய் வருவதை வஞ்சி விருத்தமென்றுங் கூறினர்.

கலிப்பாவில் அராக வுறுப்புக் கழிநெடிலடியானும் வரப் பெறும்.

"அறுசீரடியே ஆசிரியத் தளையொடு
நெறிபெற்று வரூஉம் நேரடி முன்னே"
"எழுசீரடியே முடுகியல் நடக்கும்"

என்பவை சூத்திரம். ஆசிரிய விருத்தம் பிற்காலத்தில் பிறதளையும் தட்டு வந்தது.

விருத்தங்கட் கெல்லாம் நாலடி யளவொத்திருத்தல் பொது விலக்கணமாம். அடிகள் பலவகைப்படு மேனும் நாற்சீரடி அளவாயினாற்போல, பாக்கள் பற்பல அடித்தொகை பெறுமேனும் நாலடிச் செய்யுள் அளவாயிற்று. மோனை எதுகை முதலிய தொடைகட்கும் இசைநிறைவிற்கும் அடியுள் நாற்சீரடி சிறத்தல் போலச் செய்யுளில் நாலடிச் செய்யுள் சிறப்பதாகும். இதனானே வெண்பா பலவடியாய் வருமேனும் நாலடி வெண்பா பெருவழக்காயிற்று. பிற்காலத்துச் செய்யுட்களெல்லாம் பெரும்பாலும் நாலடியாலேயே நடப்பவையாயின. நாற்சீரால் அடிநிரம்பி மண்டிலமாயினாற்போல, நாலடியாலும் செய்யுள் நிரம்பி ஒருவகை மண்டில மாயிற்றென்க.

விருத்தங்களில், 26 வரை எழுத்துப் பெற்றுவருபவற்றை விருத்த மென்றும், அதற்குமேல் தாண்டி வருபவற்றைத் தாண்டக மென்றும், இவை சந்தமாகவரின் சந்தவிருத்தம், சந்தத் தாண்டக மென்றுங் கூறினர்.

இங்ஙன மெல்லாம் ஒருபாவிற்குரிய பலவுறுப்புக்களைப் பிற பாக்கட் கினமாக்கியதால், ஓரினம் பிறவினமாயும், ஒரு செய்யுள் பல பாவிற்கினமாயும் வருதற்கேற்று, இன்ன செய்யுளொன்றென்றைத் துணியாது மயங்குதற் கிடனாயிற்று.

"மூவா முதலாவுலக மொரு மூன்றுமேத்தத்
தாவாத வின்பந் தலையாயது தன்னினெய்தி

யோவாது நின்றகுணத் தொண்ணிதிச் செல்வனென்ப
தேவாதி தேவனவன் சேவடி சேர்து மன்றே"

என்னும் சிந்தாமணிக் கடவுள் வாழ்த்துச் செய்யுளுரையில், நச்சினார்க்கினியர்,

"இத்தொடர் நிலைச் செய்யுள் தேவர் செய்கின்ற காலத்திற்குநூல் அகத்தியமும் தொல்காப்பியமு மாதலானும்...அகத்தியத்தின் வழிநூல் தொல்காப்பிய மாதலானும், பிறர் கூறிய நூல்கள் நிரம்பிய இலக்கணத்தன அன்மையானும், அந் நூலிற் கூறிய விலக்கணமே இதற் கிலக்கண மென்றுணர்க.

இச்செய்யுள் முன்னோர் கூறிய குறிப்பின்கண் வந்த செந்துறைப் பாடாண் பகுதியாம்.

இனி, இத்தொடர் நிலைச் செய்யுளை இனமென்ப. அந் நூல்கள் இனமென்று காட்டிய வுதாரணங்கடாம் அவர் சேர்த்த அவ்வப்பாக்கட்கே இனமாகாது, ஒழிந்தபாக்கட்கும் இனமாதற்கு ஏற்றலானும், துறையை விருத்தமாகவும், தாழிசையை விருத்தமாகவும், ஓதுதற்கு அவையேற்றமையானும், "மூவாமுதலா" என்னுங் கவி முதலியன தாழம்பட்ட ஓசையான் விருத்தமாகவும், சீர் வரையறையானும் மிகத்துள்ளிய வோசையானும் துறையாயுங் கிடத்தலின், இதனை விருத்தக் கலித்துறையென்னல்வேண்டும். அது கூறவே துறையும் விருத்தமுமெனப் பகுத்தோதிய இலக்கணம் நிரம்பாதா மாகலானும் இனமென்றல் பொருத்தமின்று. இச்செய்யுட்களின் ஓசை வேற்றுமையும் மிக்குங் குறைந்தும் வருவனவும் கலிக்கே யேற்றலிற் கொச்சக மென்றடங்கின" எனக் கூறியுள்ளார்.

இங்ஙனமே கலிவிருத்தம் துள்ளலிசையாற் கலியினமாயும், சீர்வகையானும் அடிவகையானும், நிலைமண்டில வாசிரியமாயும், நாலசைச் சீர்கொள்ளின், குறளடி வஞ்சிப்பாவாயும் கூறுதற்கேற்று வருதலும், கட்டளைக்கலிப்பா துள்ளலிசையாற் கலிப்பாவாயும் சீர்வகையானும் அடிவகையானும் ஆசிரிய விருத்தமாயுங் கூறுதற்கேற்று வருதலும் கண்டுகொள்க.

இதுகாறுங் கூறியவாற்ருல், பாவின மூன்றுந் தமிழ்யாப்பேயென்றும், அவை கொச்சகக்கலியின் திரிபென்றும், பின்னூலார் அவற்றைப் பன்னிரு பாவினமாகப் பகுத்துக் காட்டினரென்றும், சாலை, பண்ணை முதலிய தமிழ்ச்சொற்கள் மறைந்து ரோட்டு,

(இங்கிலீஷ்) ஜமீன்தார் (இந்துஸ்தானி) முதலிய அயற்சொற்கள் வழங்கினாற்போல, மண்டிலமென்னும் தென்சொல் மறைந்து விருத்தமென்னும் வடசொல் வழங்கிற்றென்றும், இலக்கணம் நிரம்பிய பாவியற்றும் அருமை நோக்கிச் சங்ககாலத்திற்குப் பின்னோர் எளிய யாப்பான இனங்களை யியற்றினரென்றும், அவற்றுட் சிறப்புப்பற்றி மண்டிலயாப்புப் பெருவழக்காயிற்றென்றும் தெள்ளிதின் அறிந்துகொள்க.

வடமொழிவிருத்தம் குறளடியானும் வருமேனும், விருத்தமல்லது வேறியாப்பு ஆண்டின்மையானும், அவை பெரும்பாலும் தமிழோடொப்புமையுடைமையானும், பிற்றைத்தமிழ் யாப்பில் விருத்தமே பெருவழக்கானமையானும், தமிழியற்கெல்லாம் தகாது வடநூல்வழி கற்பிக்குமாறு அத்துணை இயைபு அவ்விரு மொழிக்கும் ஆனபின்னர் மண்டில மென்னும் பெயர் மறைந்து விருத்தமென்னும் பெயர் வேரூன்றிய தென்க.

புத்த பகவான் பொருண் மொழிகள்

[பண்டித, திரு. அ. நடராஜபிள்ளையவர்கள்]

1. பெற்றோர் கடமைகள்:—

பெற்றோர்களே !

1. மக்களைக் கொடிய வழியினின் றொழிப்பீர்.
2. நற்செயல் களையவர் நாடிடச் செய்வீர்.
3. கருந்தனக் கல்வியைக் கற்றிடச் செய்வீர்.
4. பண்புள பதிபத் தினிகளைச் சேர்ப்பீர்.
5. தாயபா கத்தைச் சரிவா வளிப்பீர்.

2. மக்களின் கடமைகள்.

மக்காள் !

1. வளர்த்தபெற் றோரைப்பின் வளர்த்திட நினைமின்.
2. மனைவிமக் கட்கா வருந்தி யுழைமின்.
3. குலத்திற் கியைந்த கடமையைக் கொண்மின்.
4. முன்னோர் தேட்டைப் பொன்னெனப் போற்றுமின்.
5. பெற்றோர் நன்றியைப் பெரிதுபா ராட்டுமின்.

மொழிபெயர்ப்பு-Translation

[திரு. T. B. கிருஷ்ணசாமி முதலியாரவர்கள் M. A. B. L.]

இனியவை நாற்பது

(உசு-ம் பக்கத் தொடர்ச்சி)

உ௦. நட்டார்ப் புறங்கூறான் வாழ்த னனியினிதே
பட்டாங்கு பேணிப் பணிந்தொழுகன் முன்னினிதே
முட்டில் பெரும்பொரு ளாக்கியக்கால் மற்றது
தக்குழி யீத லினிது.

20. Pleasant it is, not to speak ill of one's relations ; pleasant to guard one's truth and be modest to all ; when in possession of much-well-earned wealth, to give gifts according to capacity is pleasant.

உக. சலவரைச் சாரா விடுத லினிதே
புலவர்தம் வாய்மொழி போற்ற லினிதே
மலர்தலை ஞாலத்து மன்னுயிர்க் கெல்லாந்
தகுதியால் வாழ்த லினிது.

21. Good to keep out the deceitful ; pleasant to treasure up the words of the poets ; it is pleasant for all mankind on this wide earth to live in a proper and becoming manner.

உஉ. பிறன்கைப் பொருள்வெளவான் வாழ்த லினிதே
அறம்புரிந் தல்லவை நீக்க லினிதே
மறந்தேயு மாணா மயரிகட் சேராத்
திறந்தெரிந்து வாழ்த லினிது.

22. Pleasant to live without coveting another's property ; pleasant to do good and refrain from evil ; pleasant to know the ways by which one could avoid association even by forgetfulness with fools.

உ௩. வருவா யறிந்து வழங்க லினிதே
ஒருவர்பங் காகாத வூக்க மினிதே
பெருவகைத் தாயினும் பெட்டவை செய்யார்
திரிபின்றி வாழ்த லினிது.

23. Pleasant to spend within one's means; pleasant to be enthusiastic without being partial; even if producing much good, it is pleasant not to do anything without much thought.

உச. காவோ டறக்குளந் தொட்டன் மிகவினிதே
ஆவோடு பொன்னீத லந்தணர்க்கு முன்னினிதே
பாவமு மஞ்சாராய்ப் பற்றுந் தொழின்மொழிச்
சூதரைச் சேர்த லினிது.

24. It is pleasant to raise a garden and dig a tank for charity it is pleasant to give cows and gold to Brahmins; pleasant to be rid of the wicked who are bent on getting gold without fearing evil-doing.

உரு. வெல்வது வேண்டி வெகுளாதா னோன்பினிதே
ஒல்லுந் துணையுமொன் றுய்ப்பான் பொறையினிதே
இல்லது காமுற் றிரங்கி யிடர்ப்படார்
செய்வது செய்த லினிது.

25. If you desire to conquer, it is desirable not to give way to anger; pleasant is the patience of one who is bent on accomplishing a thing; pleasant instead of attempting the impossible and courting failure, to do what is possible to one.

உசா. ஐவாய வேட்கை யவாவடக்கன் முன்னினிதே
கைவாய்ப் பொருள்பெறினுங் கல்லார்கட் டீர்வினிதே
நில்லாத காட்சி நிறையின் மனிதரைப்
புல்லா விடுத லினிது.

26. It is pleasant to control the desires of the five senses; even when getting lasting wealth, it is good to give up the company of the ignorant; it is pleasant not to associate with those whose learning is of a fleeting kind.

உஎ. நச்சித்தற் சென்றார் நசைகொல்லா மாண்பினிதே
உட்கில் வழிவாழா வூக்க மிகவினிதே
எத்திறத் தானு மியைவ கரவாத
பற்றினிற் பாங்கினிய தில்.

27. It is pleasant not to kill by refusal the desire of those who seek one; pleasant is the desire not to live when living without honour; pleasant not to refrain from giving what is proper to be given to others.

உஅ. தானங் கொடுப்பான் றகையாண்மை முன்னினிதே
மானம் படவரின் வாழாமை முன்னினிதே
ஊனங் கொண்டாடா ருறுதி யுடையவை
கோண்முறையாற் கோட லினிது.

28. The nobility of a donor is very pleasant; to die if overtaken by dishonour is pleasant; pleasant without making much of faults, to take only the good of anything.

உகூ. ஆற்றுனை யாற்றென் றலையாமை முன்னினிதே
கூற்றம் வாவுண்மை சிந்தித்து வாழ்வினிதே
ஆக்க மழியினு மல்லவை கூறுத
தேர்ச்சியிற் றேர்வினிய தில்.

29. It is pleasant not to trouble a man to do work for which he is not fit; it is pleasant to live with a full realisation of the certainty of death; even when losing all one's prosperity, it is pleasant not to speak lies.

ஙூ. கயவரைக் கைகழிந்து வாழ்த லினிதே
உயர்வுள்ளி யூக்கம் பிறத்த லினிதே
எளிய ரிவரொன் றிகழ்ந்துரையா ராகி
ஒளிபட வாழ்த லினிது.

30. It is pleasant to live without association with the wicked; it is pleasant to aspire to rise higher and higher; it is pleasant to live with fame and without despising the poor.

ஙக. நன்றிப் பயன்றூக்கி வாழ்த னனியினிதே
மன்றக் கொடும்பா டுரையாத மாண்பினிதே
அன்றறிவா ரியாரென் றடைக்கலம் வெளவாத
நன்றியி னன்கினிய தில்.

31. It is pleasant to be grateful; it is pleasant in a hall of justice to be impartial; it is pleasant, since no one knows his appointed time, not to covet property entrusted to one's care.

ஙஉ. அடைந்தார் துயர்கூரா வாற்ற லினிதே
கடன்கொண்டுஞ் செய்வன செய்த லினிதே
சிறந்தமைந்த கேள்விய ராயினு மாராய்ந்
தறிந்துரைத்த லாற்ற வினிது.

32. It is pleasant to protect those that seek refuge; it is proper to do what is essential even by incurring a debt; it is pleasant even for the very learned to think before they speak.

௩௩. கற்றறிந்தார் கூறுங் கருமப் பொருளினிதே
பற்றமையா வேந்தன்கீழ் வாழாமை முன்னினிதே
தெற்றென வின்றித் தெளிந்தாரைத் தீங்கூக்காப்
பத்திமையிற் பாங்கினிய தில்.

33. It is pleasant to learn the truth of things from those that know; it is pleasant not to live under a cruel King; it is pleasant to do good to those who without thought, have put their trust in us.

௩௪. ஊர்முனியா செய்தொழுகு மூக்க மிகவினிதே
தானே மடிந்திராத் தாளாண்மை முன்னினிதே
வாண்மயங்கு மண்டமருண் மாறுத மாமன்னர்
தானே தடுத்த லினிது.

34. It is pleasant to live so that the wrath of the village is not incurred; it is pleasant not to be lazy but be up and doing; it is pleasant for the king to avert a war where at close quarters the sabres flash and few escape.

௩௫. எல்லிப் பொழுது வழங்காமை முன்னினிதே
சொல்லுங்காற் சோர்வின்றிச் சொல்லுதன் மாண்பினிதே
புல்லிக் கொளினும் பொருளல்லார் தங்கேண்மை
கொள்ளா விடுத லினிது.

35. It is pleasant not to travel at night; it is pleasant when speaking to speak with care and caution; even when forced, it is pleasant not to associate with the worthless.

௩௬. ஒற்றினு ளொற்றிப் பொருடெரிதன் முன்னினிதே
முற்றுன் றெரிந்து முறைசெய்தன் முன்னினிதே
பற்றிலனாய்ப் பல்லுயிர்க்கும் பாத்துற்றுப் பாங்கறிதல்
வெற்றிவேல் வேந்தர்க் கினிது.

36. It is pleasant for Kings to gain information through spies; it is pleasant to know beforehand and then do what is proper; without attachment to any one, with kindness to all, to do good is pleasant to a victorious King.

௩௭. அவ்வித் தழுக்கா றுரையாமை முன்னினிதே
செவ்வியனாய்ச் செற்றுச் சினங்கடிந்து வாழ்வினிதே
கவ்வித்தாங் கொண்டுதாங் கண்டது காமுற்று
வவ்வார் விடுத லினிது.

37. It is pleasant not to poison the mind of Kings and speak words out of envy; it is pleasant to live hating wrath and keeping a mind unwarped; it is pleasant not to covet whatever is seen, but to forget that one ever liked it.

ரு அ. இளமையை மூப்பென் றுணர்த லினிதே
கிளைஞர்மாட் டச்சின்மை கேட்ட லினிதே
தடமென் பணைத்தோட் டளிரிய லாரை
விடமென் றுணர்த லினிது.

38. It is pleasant to regard even one's youth as age and be prepared; it is pleasant to exchange compliments with one's relations; it is pleasant to regard as poison women of ill-fame, though they have shoulders like the bamboo and softness like tender shoots.

ரு கூ. சிற்று ளுடையான் படைக்கல மாண்பினிதே
நட்டா ருடையான் பகையாண்மை முன்னினிதே
எத்துணையு மாற்ற வினிதென்ப பால்படுங்
கற்று வுடையான் விருந்து.

39. The prowess of one who has an army of youths is pleasant; it is pleasant to see the self-control of one who has many relations; and it is very pleasant to feast with one who has a cow and a calf.

சம். பிச்சைபுக் குண்பான் பிளிறாமை முன்னினிதே
துச்சி லிருந்து துயர்கூரா மாண்பினிதே
உற்றபே ராசை கருதி யறனொரூஉ
மொற்க மிலாமை இனிது.

40. It is proper that a beggar should not lose his temper; it is pleasant not to be a sub-tenant and suffer sorrows; it is pleasant not to deviate from the path of rectitude out of mere covetousness.

சக. பத்துக் கொடுத்தும் பதியிருந்து வாழ்வினிதே
வித்துக்குற் றுண்ணா விழுப்ப மிகவினிதே
பற்பல நாளும் பழுதின்றிப் பாங்குடைய
கற்றலிற் காழினிய தில்.

41. It is pleasant even at ten times the cost to live in one's own place; it is pleasant not to be driven to use paddy-seed for eating; it is pleasant, very pleasant, to study for long without wearying thereof, useful books.

இனியவை நாற்பது முற்றும்

வரலாற்றுப் பகுதி
History & Biography

திருவாதவூர்

(மணிவாசகப்பெருமான் பிறந்த இடம்)

(முகப்புப் படம் பார்க்க)

[திரு. ஜே. எம். சோமசுந்தரம்பிள்ளை அவர்கள் பி.ஏ, பி.எல்.]

மதுரைமாநகரத்திற்குக் கிழக்கே பதினைந்து கல் (மைல்) தொலைவில் இருப்பது திருவாதவூர் என்னும் ஒரு சிறிய ஊர். அவ்வூருக்கு உந்துவண்டிகள் (மோட்டார்) போக நல்ல பாதை இருக்கிறது. வழியில் ஆங்காங்குள்ள நெல்வயல்களும், பெரியாற்றுக் கால்வாய்களும், பரந்த வெளிகளும், கற் குன்றுகளும், மலைத் தோற்றங்களும், சிற்றூர்களும் மனக்கிளர்ச்சியுண்டாக்குகின்றன.

2. பன்னாட்குமுன், திருவாதவூர் அப்பெயர் கொண்ட ஒரு "ஜில்லா" வாக விருந்தது. அவ்வூர் திருவாதூர் என்றும் பண்டு வழங்கப்பட்டுளது. வாது என்றால் தருக்கம் என்பது ஒரு பொருள். அக்காலத்தில் அவ்வூரில் பல சமய தத்துவவாதிகள் இருந்ததாகக் கருதப்படுகிறது.

3. அவ்வூரை யணுகும்பொழுதே அதன் அழகு சிறந்து காணப்படும். அவ்வூரின் வடபுறத்திலும் மேற்புறத்திலும் ஒரு பெரிய ஏரி சூழ்ந்திருக்கிறது. அவ்வேரியின் கரைமீதே மேலூருக்குப் போகும் வண்டிப்பாதை போடப்பட்டிருக்கிறது. அப் பாதையிலிருந்து பார்த்தால் ஏரிக்கப்பாலுள்ள அழகர்மலையின் காட்சி கண்களைக் கவரும். பழைய சிவன்கோவிலின் கோபுரம் ஒன்று பச்சென்ற சோலையின் நடுவே ஓங்கி விளங்கும்.

4. அவ்வேரியின் மதகு ஒன்றின்மீது "புருஷாமிருகம்" என்ற ஒரு கற்சிலை வீர உருவத்துடனிருக்கிறது. வேறு எவ்விடத்திலும் இவ்வித தோற்றத்துடன் புருஷாமிருகம் அமைக்கப் படவில்லை யென்று சொல்லப்படுகிறது. புருஷாமிருகம் நீரைத் தூய்மையாக்குவதென்றும், ஊரைக் காப்பதென்றும் நம்பப்படுகிறது. அதற்கு ஆண்டுதோறும் மகாசிவாத்திரி காலத்தில் ஊரா

ரெல்லாருங் கூடி ஒரு பெருவிழாக் கொண்டாடுகிருர்கள். அத்திரு விழா நடந்த உடனே மழை பெய்வது வழக்கமாக விருக்கிறது.

5. ஏரிக்கரை கல்லினுல் கட்டப்பட்டது. அதன்மேல் கோட்டை மதில்களும், வட்டமான பாசறைகளும் கட்டப்பட்டு, இப்பொழுது அவைகளின் இடிந்துபோன இரண்டொரு பகுதிகள் மட்டும் காணப்படுகின்றன. முற்காலத்தில் அவ்வூர் நாற்புறங்களிலும் கோட்டையால் சூழப்பட்டிருந்ததாகச் சொல்லப்படுகிறது.

6. ஏரியையும், மதிலையுங், கடந்து ஒரு பிடாரி கோவிலிருக்கிறது. அதன் பக்கத்தில் கல்வெட்டுள்ள சில கற்களாலமைக்கப்பட்ட ஒரு சிறு கட்டிட மிருக்கிறது. முன்னொரு காலத்தில் வெங்கம்மாள் என்ற ஒருத்தி, கொலையுண்ட தன் கணவனோடு உடன்கட்டை ஏறினது அவ்விடம் என்று சொல்லப்படுகிறது. அச் செய்தி நிகழ்ந்தபின்னர் அவ்வூர் வளம்பெருகியதாகவுஞ் சொல்லப்படுகிறது.

7. கி. பி. முதல்நூற்ருண்டிலிருந்தவரும் சங்கப்புலவர்களில் சிறந்தவரும், ஐம்பத்தைந்தாவது திருவிளையாடலில் திருவாலவாய்க் கடவுளால் முதற் புலவராகிய மூவருள் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரும், பல உயரிய தமிழ் நூல்களியற்றியவருமாகிய கபிலர் பிறந்த ஊர் திருவாதவூராகும். கடையெழு வள்ளல்களில் ஒருவராகிய பாரி என்பார்க்கு உரிய நண்பராவார் கபிலர். பாரிவள்ளல் ஆண்டுவந்த பறம்புநாடு இதுவென்றே சிலர் கூறுவர். அந்த ஊரிலுள்ள கருப்பண்ணசாமி கோவிலுக்கு "ஏழு வீடுபாரி கருப்பு" என்று பெயர் வழங்குகிறது.

8. அந்த ஊரில் பாரி வள்ளலின்வழிவந்த இருநூறு குடும்பத்தினர்கள் இன்றைக்கும் இருக்கிருர்கள். அவர்கள் வேளாளர்கள். அவர்கள் தங்கள் குடும்பத்தில் பிறக்கும் முதற் குழந்தைக்கு, பெண்ணு யிருந்தாலும் ஆணு யிருந்தாலும், பாரி என்று பெயரிடுகிருர்கள். வேளாளர்களை யொழித்த மற்ற இனத்தவர்களும் பாரி யென்ற பெயரை வைத்துக்கொண்டிருக்கிருர்கள்.

9. மாணிக்கவாசகப் பெருமான் பிறந்தவிடம் அவ்வூராதலால், அஃது இக்காலத்தில் எல்லாராலும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. சைவத் திருமுறைகளில் எட்டாவதாகிய "திருவாசகம், திருக்கோவையார்" என்ற ஒப்புயர்வற்ற நூல்களைப் பாடிய

வர் மாணிக்கவாசகர். "திருவாசகத்தில் உருகாதார் ஒரு வாசகத்திலும் உருகார்" என்பது பழமொழி. அப்பெரியார் நான்காம் நூற்றுண்டிலிருந்தாரென இதுவரையிலும் வெளி வந்துள்ள ஆராய்ச்சியின் முடிவு விளக்குகின்றது.

10. மாணிக்கவாசகர் பிறந்து வளர்ந்த வீடு இருந்த இடமும் அவ் வீட்டின் அடிப்படையும் அவர் ஆண்டுவந்த கிணறும் இன்றுங் காண்பிக்கப்பட்டு வருகின்றன. கற்குழைகளினுலும், முட்செடிகளினுலும் மூடப்பட்டிருந்த அவ்விடத்தைச் செம்மைப் படுத்தி இப்பொழுது அவ்விடத்தில் மாணிக்கவாசகருக்கு ஒரு தனிக்கோவில் கட்டப்பட்டு வருகிறது. இன்னுஞ் சில மாதங்களில் அக் கோவிலுக்கு குடமுழுக்குவிழா நடத்தப் படும்.

11. மாணிக்கவாசகர் தந்தை பெயர் சம்புபாதாகிருதர் என்பதாம். அவர் தாயார் சிவஞானவதியாவர். அவர் அமாத்தியப் பிராமணர் வகுப்பினரென்ப ரொருசாரார். அவர் பதினுறு வயதிற்குள் எல்லாக் கலைகளையும் முற்றுமுணர்ந்து நாடெங்கும் புகழ் பெற்றவரானுர். அவருக்குத் திருவாதவூரர் என்பது பெற்றோர்களால் இடப்பெற்ற பெயர்.

12. மதுராபுரியில் ஆண்டுவந்த அரிமர்த்தன பாண்டிய அரசன் திருவாதவூரரைக் காண ஆசைப்பட்டு அவரைத் தம்மிடத்திற்கு வரவழைத்தான். திருவாதவூரர் வந்ததும் அவர் திறமையைக் கண்டு அரசன் வியந்து அவரை உடனே தனக்கு முதன் மந்திரியாக அமைத்து, "தென்னவன் பிரமராயன்" என்ற பட்டப்பெயரையுங் கொடுத்து, அரசாட்சி முழுவதையும் அவர்கையில் ஒப்புவித்துவிட்டான். முதன் மந்திரியான அவர், அந்நிலைக்கேற்ற எல்லாவித செல்வக் கோலத்திலுமிருந்துகொண்டு அரசாட்சியை ஒழுங்காக நடாத்தி வந்தார். அப்படி இருந்த போதிலும் அவர் மனம், பந்தமாகிய இவ்வுலகப் பற்றை விட்டு, சச்சிதானந்த வடிவாகிய சற்குருவைக் காணும் அவாவுடையதாக விருந்தது. அவர் எண்ணம் முற்றுப் பெறுவதற்குக் காலமும் அணுகியது.

13. ஒருநாள் அரசன் தன்னுடைய குதிரைப் படைகளைப் பார்வையிட்டான். அதன்பின் குதிரைகள் புதிதாக வாங்க வேண்டுமென அரசன் கருதினுன். அச்சமயம், மேற்குத் துறை

யில் உயர்ந்த குதிரைகள் வந்திறங்கி யிருப்பதாக ஒற்றர்கள் கூறினர். உடனே பாண்டியன் முதன் மந்திரியாரிடம் ஏராள மான பொருளைக் கொடுத்துக் குதிரைகள் வாங்கிவரக் கட்டளை யிட்டான். வாதவூரரும் கட்டளைப்படி திருப்பெருந்துறை எனும் அவ்வூரை அணுகினர்.

14. ஆங்கு ஒரு சோலையினடுவே, குருந்த மரத்தின் கீழே தன் 999 கணங்களோடு, குரு சிஷ்யபாவனையாய்க் கைலாயத்தி னின்று சிவபெருமான் திருவாதவூரரை ஆட்கொள்ள வந்து அமர்ந்திருந்தார். சிவகணங்கள் ஆகமங்களை ஓதும் இன்னிசை, சோலையை அணுகும் திருவாதவூரர் செவியில் பட்டது. அவர் சில ஒற்றர்களை விட்டு அவ்வொலியின் காரணத்தைக் கண்டு வரச்சொன்னர். ஒற்றர்கள் வந்து பார்த்துச் சிவபெருமான் போன்ற ஒரு குருநாதன் தன் அடியார்களுடன் பாடுவதாகச் சொன்னர்கள். உடனே முதன்மந்திரியார் பல்லக்கை விட் டிறங்கி, சோலையுள் புகுந்து குருவைக்கண்டு, அழலினிட்ட மெழுகுபோல் உருகி, அவர் திருவடியில் வீழ்ந்தார். வீழ்ந்த வரை வாரியெடுத்து முறைப்படி தீக்கை செய்து மாணிக்கவாசகர் என்ற பெயரைத் தந்தார் குருநாதன். உடனே மந்திரியாரின் உலகப்பற்று நீங்கிவிட்டது தம் ஆடை அணிகலன்கள், அரசன் கொடுத்த பொருள்கள் எல்லாவற்றையும் குருவினிடத்தில் கொடுத்துவிட்டார்; திருநீறும் கோவணமும் அணிந்து கொண் டார்.

அதைக்கண்ட மற்றவர்கள் முறையிட்டும், முதன் மந்திரி யார் அவர்களைப் பொருட் படுத்தவில்லை. அதுகண்ட அவர்கள் மதுரைக்குத் திருப்பிவந்து நிகழ்ந்தவற்றை அரசனிடத்தில் தெரி வித்தார்கள். அதைக்கேட்ட பாண்டியன் சினங்கொண்டு, மந்திரி யாரை உடனே திரும்பிவரும்படி கண்டிப்பான கட்டளையை அனுப்பினன். மந்திரியார் அக் கட்டளையைத் தன் குருவினி டத்தில் காண்பித்தார்.

(தொடரும்)

ஆராய்ச்சிப் பகுதி-Research

சோழர்கள் கல்வெட்டுகளிற்கண்ட சில குறிப்புகள்.

[இராவ்சாஹிப். திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள்]

சோழர்களுடைய ஆட்சி தென்னாட்டில் 9-வது நூற்றாண்டு முதல் 12-வது நூற்றாண்டு முற்றும் மிகச் சிறந்திருந்தது. அவர்கள் போர்களில் சிறந்து விளங்கி ஏனைய நாடுகளைத் தங்கள் வசப்படுத்தினது மாத்திரமேயன்றி நாட்டில் அரசியல் திட்டங்களையும் வெகு செம்மையாக ஆராய்ந்து அறிந்து போற்றிவந்தார்கள். அவர்கள் காலத்தில் அரசியல் திட்டங்கள் மிகுந்த பக்குவம் அடைய, அவற்றின் காரணமாக நாட்டுமக்கள் அமைதியும் செல்வமும் பெற்று சிறந்து விளங்கினார்கள். கல்வியறிவும் அவர்கள் பால் பெருகி விளங்குவதாயிற்று. பெரும் புலவர்களும் நாட்டில் தோன்றி அரிய நூல்களை வெளியிட்டார்கள். இவ் விவரங்களை எல்லாம் அவர்கள் காலத்துக் கல்வெட்டுகள் நன்றாக நமக்கு விளக்கிக் காட்டுகின்றன. நாடெங்கும் பாவிக் கிடக்கும் அக் கல்வெட்டுகள் பல அரிய செயல்களை நமக்கு எடுத்துக்காட்டுவனவாகும்; இப்போது அவைகளில் ஒரு தொகுதியாகிய கரூர்க் கல்வெட்டுக்களை மாத்திரம் நாம் இங்கே நமது ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்வோம்.

கரூர் பசுபதீஸ்வரர் ஆலயத்தில் ஐந்து கல்வெட்டுகளை எடுத்துச் சாசன பரிசோதகர் வெகு ஆண்டுகளுக்குமுன் பதிப்பித்திருக்கின்றார்; என்றாலும் அவற்றிற் கிடக்கும்படியான பல அருமையான குறிப்புகளை உள்ளபடி மக்களுக்கு இதுவரையில் எடுத்து எவரும் சொல்லவில்லை. கரூர் என்பது கொங்குநாட்டில் உள்ள ஏழு பாடல்பெற்ற தலங்களில் ஒன்று. இதனை ஞானசம்பந்தர் பாடியிருக்கின்றார். கல்வெட்டுகளில் இவ்வூர் ஆலயத்தைத் திருவாநிலை என்ற பெயரால் குறித்திருக்கிறார்கள். இவ்வூர் இருக்கும் நாடு வெங்கால் நாடு என்றும் கொங்கு மண்டலம் அதிராஜராஜ மண்டலம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே இராஜேந்திர சோழன், குலோத்துங்க சோழன் III

கோனேரின்மைகொண்டான் என்ற அரசர்களுடைய கல்வெட்டுகள் காணப்படுகின்றன. கோனேரின்மைகொண்டான் என்பது ஒரு பட்டப்பெயர். இப் பட்டத்தைக் கொங்கு சோழர்களில் வீர சோழன், வீர ராஜேந்திரன் என்ற இருவர் வகித்து இருந்தார்கள். கரூரில் கிடைத்த கண் மாணர் சாசனம் கொங்கு நாட்டில் வேறு ஐந்து இடங்களிலும் பொறிக்கப்பட்டுள்ளதால் அப்பட்டங் கொண்ட அரசன் கொங்கு சோழனாகத்தான் இருக்க வேண்டுமென்று ஊகிக்கலாம். இவ்வைந்து சாசனங்களிலும் சோழர்கள் காலத்தில் வழங்கிவந்த சில முக்கிய வழக்கங்களைப்பற்றி நாம் நன்றாக அறிய முடியும். அவைகளிற் சிலவற்றை இங்கே குறிப்போம்.

I. வரிகள்—எல்லா அரசியல்களிலும் நடப்பது போலவே சோழர்களும் பலவித வரிகளை வாங்கி வந்தனர். அவைகளில் நில வரியும், தொழில் வரியும் முக்கியமானவை. தொழில் வரிகளில் ஒவ்வொரு சாதிக்கும் தனித்தனி வரி இருந்தது. உதாரணமாகக் குசக்காணம் (குயவர்களுடைய வரி), வண்ணாரப் பாறை (வண்ணார்களின் வரி), தறி இறை (நெய்பவர்களின் வரி), தட்டாரப் பாட்டம் (தட்டார்களின் மீது வரி), இடைப் பாட்டம் (இடையர்களின் மீது வரி), ஈழப்பூட்சி (சாணார்களின் மீது வரி), முதலான பல தொழில்வரிகள் இருந்தன. இவ்விதம் பல வரிகள் இருக்கக் கரூர்ச் சாசனத்தில் கண்டவற்றை இனி ஆராய்வோம். இராஜேந்திர சோழதேவன் காலத்துக் கல்வெட்டில் “இறை, வரி, சிற்றாயம், எலவை, உகவை, மன்றுபாடல், தண்டம், குற்றம் மற்றும் எப்பேர்ப்பட்டனவும்” என்று வரிகளின் தொகுதிகள் குறிப்பிடப்படுகின்றன. இதனால் எட்டுவிதமான வரிகளின் பெயர்களை நாம் அறிகிறோம். அவற்றைப்பற்றிச் சிறிது விவரமாக ஆராயவேண்டியது அவசியமாக இருக்கிறது.

1. இறை—இதனை Revenue என்று சாசன பரிசோதகர் மொழிபெயர்த்திருக்கிறார். அவ் ஆங்கிலச் சொல் சர்க்காருக்குக் கிடைக்கும் வருமானங்களைக் குறிக்கும். அதற்கும் Tax என்று சொல்லும் வரிக்கும் வித்தியாசம் உண்டு. தமிழில் இறை என்பது இறைவன் நிலத்தின் பேரில் வாங்கும் ஆறில் ஒரு கடமைக்குப் பெயராகும். அதனால்தான் இறைவனுக்கும் (அரசன்) அப்பெயர் வந்தது. இறை வாங்குபவன் இறைவன் அல்லவா? இவ்

விதக் கடமையை இறைவனுக்குச் செலுத்தாத நிலங்கள் ஆலயங்களுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்ருந்தால் இறையிலி தேவதானம் என்று பெயர் பெறும். நாம் ஆராய்ந்து வரும் இச் சாசனத்திலேயே ஒரு நிலத்தை "திருவாநிலை மகா தேவற்கு இறையிலி தேவதான" மாகக் கொடுக்கப்பட்டதாகச் சொல்லப் பட்டிருக்கிறது. அவ்விதம் இறையில்லாத தேவதா நிலத்தை "திரு நாமத்துக் காணி" என்ற பெயரால் வழங்குவார்கள். இச் சொல்லையும் இந்தக் கல்வெட்டிலேயே காணலாம்.

இவ்விதம் ஆலயத்திற்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட ஒரு நிலம் "இறையிலி" என்று சொல்லப்படுமானல் அந்நிலத்தை உடையவர்கள் இறை கொடுக்கவேண்டியதில்லையோ என்று கேட்டால், அவ்விதம் அன்று; அந் நிலத்திற்கு இறை அல்லது கந்தாயம் எப்பொழுதும் உண்டு; ஆனல் அக் கந்தாயத்தை இறைவனுக்குச் செலுத்துவதற்குப் பதிலாகத் தானம் செய்யப் பட்ட ஆலயத்திற்குச் செலுத்தவேண்டும் என்பதுதான் அக் காலத்திய அரசியல் நோக்கம். ஆகவே இறை என்பதைக் கந்தாயம் என்ற பொருளில் வழங்கி வந்திருக்கிருர்கள்.

2. புரவு—இதனை Tax என்று சாசனப்பதிவுப் பரிசோதகர் மொழிபெயர்த்து இருக்கின்ருர். இவ் ஆங்கில பதம் வரி என்பதைத் தெரியப்படுத்தும். வரி என்பது நிலத்திற்கு மாத்திரமேயன்றித் தொழிலாளர்களுக்கும், பண்டங்கள்மீதும், விதிக்கப்படும் கடமையாகும். இஃது அரசனுக்கு மாத்திரமேயன்றி ஊர்ச்சபைகளுக்கும், ஆலய அதிகாரிகளுக்கும், வியாபாரச் சங்கங்களுக்கும் செலுத்தப்படுங் கடமையாகும். இக் காலத்திலும் இவ்வித வரிகள் ஏற்பட்டிருப்பதைக் காணலாம். நகர்ச்சபை, நாட்டுச் சபை, கிராமச்சபை இவைகள் வரிவிதித்தல் இக் காலத்திலும் உண்டு. இதைப்போலவே சோழர்கள் காலத்திலும் வரிகள் விதிக்கப்பட்டன.

இவ்வித வரிகளுக்குப் புரவு என்ற பதம் பிரயோகிக்கப்பட்டது . ஆராயத்தக்கதொன்று ஆகும். புரவு என்பது காப்பது என்ற பொருள் தரும். அது செய்பவனுகிய அரசனுக்குப் புரவலன் என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது. காக்கும் தொழிலை அரசனேயன்றி ஊர்ச்சபைகளும் தொழிற் சபைகளும் செய்யும்; ஆகவே அவ்விதம் காக்குஞ் செயலுக்காக ஒரு கடமை ஏற்படுத்தி யிருப்

பார்கள். அக் கடமைக்குப் புரவு என்ற பெயர் ஏற்பட்டிருத்தல் வேண்டும்.

3. சிற்றுயம்—இதனை Small toll என்று சாசன பரிசோதகர் குறித்திருக்கிறார். அதாவது சிறிய சுங்கத் தீர்வை என்று பொருள் ஏற்படுகிறது. ஆயம் என்பது பொதுவாகச் சுங்கத் தீர்வைக்குப் பெயர். நாட்டில் ஏற்றுமதி, இறக்குமதிப் பொருள்களுக்குச் சுங்கம் வாங்குவது சோழர்கள் காலத்தில் வழக்கமாக இருந்தது. இக்காலத்திலும் அவ்வித வழக்கம் இருப்பதை நாம் அறிவோம். குலோத்துங்கச் சோழன் காலத்தில் சுங்கத் தீர்வை மிகவும் பளுவாக இருந்தது என்றும், அதனுல் பொது மக்கள் மிகவும் வருந்தினுர்கள் என்றும் கண்டு அவர்களுக்கு நன்மை புரியும் பொருட்டுச் சுங்கத்தை நீக்கிவிட்டபடியால் அச் சோழனுக்குச் "சுங்கம் தவிர்த்த சோழன்" என்ற பெருமை பொருந்திய பெயர் ஏற்பட்டது. ஆகவே அக்காலத்தில் ஆயம் என்ற சுங்கம் நாட்டில் ஏற்பட்டிருந்தது.

(தொடரும்

---

*திருச்சி மலைக்கோயில்

மௌனசுவாமிமடத்து விபரங்கள்

ஸ்ரீ மாதுரு பூதேசுவர சுவாமிக்கு உச்சிக்கால சாயரெட்சை நித்தியப்படி, அதிகப்படி உச்சவாதி முதலாகியதுகளுக்கு மவுனத் தம்பிரான் மாரிபம் உண்டாகிய ஊதிபங்களும், திருப்பணி, திருவாபரணங்கள், பாத்திர வகையராக்களும் கிராமவளிகளின் விவரமும், தம்பிரான்கள் பட்டங்களின் விபரங்களும் எழுதியது.

1. சாலியவாகன சகாப்த்தம் கருoகன் விசுவஸு ஆனிமீ முதல் ஷை சகாப்த்தம் கருசுசூன் பார்த்திபஸு வைகாசிமீ வரை.

முதலாவது மவுனத் தம்பிரான் சுவாமி யவர்களுடைய பட்டம்—ஸு—சுமிரு. மவுனத்தம்பிரான் சுவாமியவர்கள் நாளையில் உண்டாகிய ஊதிபம்—உச்சிக்கால கட்டளைக்காகவும், தெப்ப உத்ஸவத்துக்காகவும், உச்சிப்பிள்ளையார் அபிஷேக நைவேத்தியத்துக்காகவும் உண்டாகியது. சூத்தப்பா பக்கத்தில் கிருஷ்ண

---

*இக்கட்டுரை திரு. S. அனவரதவிநாயகம்பிள்ளை அவர்கள் M.A.,L.T. அனுப்பி வைத்ததாகும். திருச்சி திரு. M. நடேச முதலியார் அவர்களால் திருத்தப்பெற்றது. ஏட்டில் கண்டவாறு படியெடுத்து அச்சிடப்படுகிறது.

சமுத்திரமும், தொண்டமான்பட்டியும், சில்லரைச் செங்காட்டுப் பட்டவர்த்தியும், ஓட்டாங்குறிச்சி பட்டவர்த்தி செய் நமனு வயலும், மணப்பாரை பாளையப்பட்டில் மேல்குடி கிராமமும் க—மாத்தூர் கிராமம் க-ஆலத்தூரில் உச்சிப் பிள்ளையாருக்குப் பட்டவர்த்தி செய் 2.

இதுகளெல்லாம் மவுனத்தம்பிரான் சுவாமியவர்கள் நாளையிலுண்டாகிய ஊதிபங்கள்.

சாலிய வாகன சகாப்தம் கருசுசூன் பார்த்தீப வருஷ ஆனி மீ முதல் கருஅச ன் சோபகிருது வருஷ வைகாசி மீ வருஷ மஅ.

2. இரண்டாவது தாயுமானத் தம்பிரான் சுவாமியவர்கள் பட்டம் வருஷ மஅ.

ஷை தாயுமானத் தம்பிரான் சுவாமிகள் நாளையில் உண்டாகிய ஊதிபங்கள் - தளவாய் முதலியாரென்பவர் ஷையார் பேரால் மலைமேல் தளவாய் மண்டபமென்று வஸந்த உத்ஸவத்துக்குப் பதினாறுகால் மண்டபமும் கட்டிவைத்து ஷை மண்டபத்தில் வஸந்த உத்ஸவம் நடந்து வரும்படிக்கு ஷை உத்ஸவ செலவுக்காக அபிஷேக முதலிய சகல செலவுக்கும் திட்டம் ஏற்படுத்திவைத்து அதற்காக நாகமங்கலமென்னும் கிராமமும் சோழமாதேவி பட்டவர்த்தி செய் சு சர்வமானியமாக வாங்கிவிட்டு வசந்த உத்ஸவம் நடந்து வரும்படிக்கித் தளவாய் முதலியாரால் விடப்பட்டது.

ங. மூன்றாவது நமச்சிவாயத் தம்பிரான் சுவாமியவர்கள் பட்டம் வருஷ உமங.

ஷை நமச்சிவாயத் தம்பிரான் சுவாமியவர்கள் நாளையிலுண்டாகியது:—கர்னாடக நாயக்கரவர்கள் நாளையில் அரண்மனையில் கொல்லராயிருந்த சூரப்ப நாயக்கரென்பவர் ஷையார் பேரால் சூரப் பிள்ளையாரென்று விக்கினேஸ்பானும் செய்துவைத்து ஷை விக்கினேஸ்பானுக்கு அபிஷேக நைவேத்தியத்துக்கு கொழுக்கட்டைக்குடி கிராமமும், தர்க்கை அம்மன் அபிஷேக நைவேத்தியத்துக்கு கொட்டப்பட்டிக் கிராமமும் ராஜாங்க நாயக்கரவர்களிடத்தில் சர்வ மானியமாக வாங்கி தாமிர சாசனமும் சிலாசாசனமும் செய்து கொடுத்து ஷை சூரப்பிள்ளையார் தர்க்கை யம்மனுக்கும் நித்தியப்படி அதிகப்படி முதலாகியதெல்லாம் நடப்பிவைத்

துக்கொண்டு வரும்படியாக சூரப்ப நாயக்கரால் விடப்பட்டது கொழுக்கட்டைக்குடியும் கொட்டப்பட்டியும்.

ஷ பட்டத்தில் இலுப்பையூர் காமாக்ஷி நாயக்கன் என்பவர் கோடைத் திருவிளா உச்சபத்திற்கு சுவாமி யெழுந்தருளச்செய்ய வேண்டியதற்காக மலையின்பேரில் பனிரெண்டுகால் மண்டபம் கட்டி வைத்து அதில் கோடைத்திருவிழா நடப்பிவைத்துக்கொண்டு வரும்படிக்கித்திட்டம் ஏற்படுத்திவைத்து ஷ சிலவுகளுக்காகதிரு நல்லூரைச் சார்ந்த நாச்சிக் குரிச்சியில் ஒரு கொளமும் அதைச் சேர்ந்த நஞ்சையில் செய் உ௰உ நிலமும் புஞ்சையில் செய் உ௰உ கலவிரையடிக்காடும் சர்வ மான்யமாக விட்டுக் கொடுத்து அந்த நிலங்களின் வருமானத்தைக்கொண்டு கோடைத்திருவிளா நடப்பி வைத்துக்கொண்டு வரும்படியாக காமாட்சி நாயக்கரால் சர்வ மானியமாக விடப்பட்டது, நாச்சிக்குரிச்சிக் கிராமம்.

ஷ பட்டத்தில் நாயக்காவர்கள் அரண்மனையில் சேருவை யாயிருந்த செவந்தியாண்டி சேருவைகாரன் என்பவர் அர்த்த சாமத்தில் பல்லக்குச் சொக்கர் எழுந்தருளி வரும்போது பாத பூசைக் கட்டளைக்காக உய்யக் கொண்டான் கிராமத்தில் குட முறட்டிக் கரையோரம் தென்னந்தோப்பு மாந்தோப்பு முதலாகிய பல விருக்ஷம் வைத்து ஷ தோப்பின் வருமானத்தில் பாத பூசைக் கட்டளை நடப்பி வைத்துக்கொண்டு வருப்படியாக செவ்வந்தியாண்டி சேருவை காரனல் விடப்பட்டது உய்யக் கொண்டான் தோட்டம்.

ஷ மூன்ருவது பட்டம் நமச்சிவாயத் தம்பிரான் சுவாமியவர்கள் பட்டத்தில் நாயக்காவர்கள் அரண்மனையிலிருந்த கோட்டை கெஸ்த்தி சம்போஜிராவ் என்பவர் வீரேசுரத்தைச் சேர்ந்த படுகையில் பல விருட்சம் தோப்புகள் வைத்து ஷ தோப்பில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்து வைத்து ஷ சுவாமிக்கு அபிஷேக நைவேத்திய முதலிய தெல்லாம் தோட்டத்தின் வருமானத்தில் நடப்பிவைத்துக் கொண்டு வரும்படியாக சம்போஜி ராவால் விடப்பட்டது வீரேசுரம் தோட்டம்.

ஷ பட்டத்தில் சித்திரை உத்ஸவம் ஒன்பதாந் திருநாள் இந்திர விமானம் மண்டகப்படியில் அபிஷேக நைவேத்தியமும் சுவாமி வீதியில் எழுந்தருளி வாவும், சகல சிலவுகளுக்கும் பெரி பிள்ளை யென்பவரால் மருதாண்டாக் குரிச்சிக் கிராமத்தில் நஞ்சை

யில் அஞ்சு முக்காலும் புஞ்சையில் கீழ்ப்படுகை மேல்படுகை தோப்புகள் ரெண்டும் விட்டுக் கொடுந்து ஷை வருமானத்தில் கொண்டு இந்திர விமான மண்டகபடி நடப்பிவைத்துக் கொண்டு வரும்படி பெரிய பிள்ளையால் விடப்பட்டது மருதாண்டக்குரிச்சி.

ஷை பட்டத்தில் சித்திரை உத்ஸவம் பத்தாந் திருநாள் வெள்ளை காத்தி மண்டகப்படிச் சிலவுக்காக இருசப்ப செட்டியார் என்பவர் திருத்தான் தோணியில் தென் கண்டத்தில் நஞ்சையில் செய் எ நிலம் விட்டுக் கொடுத்து ஷை நிலத்தின் வருமானத்தைக் கொண்டு ஷை பத்தாந் திருநாளில் சுவாமி வீதி வலம் வந்து அவரோகணமாகிச் சேத்தி வந்ததின்பேரில் இருசப்ப செட்டியார் மண்டபத்தில் சுவாமியை எழுந்தருளப் பண்ணி அபிஷேக நைவேத்தியமாகி மஞ்சநீராடிக் கொண்டு வீதி சுத்திவந்து கோவிலுக்கு எழுந்தருளி கொடி இறக்கிக் கொண்டு சேத்திக்கு எழுந்தருளும்படிக்கு இருசப்ப செட்டியாரால் விடப்பட்டது திருத்தந்தோணி நஞ்சையில் செய் எ நிலம்.

ஷை பட்டத்தில் திருவாதிரை கட்டளை உபயத்துக்காக சதாசிவ முதலியாரென்பவர் திருத்தாந் தோணியில் வட கண்டத்தில் நஞ்சையில் செய் ௩ நிலம் விட்டு, ஷை நில வருமானத்தில் வரப்பட்ட வருமானத்தைக் கொண்டு திருவாதிரையில் அபிஷேக நைவேத்திய முதலாகியதுகளெல்லாம் நடப்பி வைத்துக்கொண்டு வரும்படி சதாசிவ முதலியாரால் விடப்பட்டது திருத்தந்தோணி வட கண்டத்தில் செய் ௩.

ஷை பட்டத்தில் பாலு நாயக்கரென்பவர் சாயரெட்சையில் அபிஷேக நைவேத்தியம் நடப்பிவைத்துக்கொண்டு வரும்படிக்கித் திட்டம் செய்து திருத்தாந்தோணியும் வடகண்டத்தில் நஞ்சை செய் எ நிலம் விட்டுக்கொடுத்து, ஷை நிலத்தில் வரப்பட்ட வருமானத்தில் சாயரெட்சையில் சுவாமி அம்மன் முதலிய.......... அபிஷேக நைவேத்தியமும் திருவிளக்கு முதலியதும் போட்டு நடப்பி வைத்துக்கொண்டு வரும்படி ஏற்பட்டது திருத்தாந் தோணி வடகண்டம் செய் எ.

(தொடரும்)

துக்கொண்டு வரும்படியாக சூரப்ப நாயக்கரால் விடப்பட்டது கொழுக்கட்டைக்குடியும் கொட்டப்பட்டியும்.

ஷை பட்டத்தில் இலுப்பையூர் காமாக்ஷி நாயக்கன் என்பவர் கோடைத் திருவிளா உச்சபத்திற்கு சுவாமி யெழுந்தருளச்செய்ய வேண்டியதற்காக மலையின்பேரில் பனிரெண்டுகால் மண்டபம் கட்டி வைத்து அதில் கோடைத்திருவிழா நடப்பிவைத்துக்கொண்டு வரும்படிக்கித்திட்டம் ஏற்படுத்திவைத்து ஷை சிலவுகளுக்காகதிரு நல்லூரைச் சார்ந்த நாச்சிக் குரிச்சியில் ஒரு கொளமும் அதைச் சேர்ந்த நஞ்சையில் செய் உ௰உ நிலமும் புஞ்சையில் செய் உ௰உ கலவிரையடிக்காடும் சர்வ மான்யமாக விட்டுக் கொடுத்து அந்த நிலங்களின் வருமானத்தைக்கொண்டு கோடைத்திருவிளா நடப்பி வைத்துக்கொண்டு வரும்படியாக காமாட்சி நாயக்கரால் சர்வ மானியமாக விடப்பட்டது, நாச்சிக்குரிச்சிக் கிராமம்.

ஷை பட்டத்தில் நாயக்கரவர்கள் அரண்மனையில் சேருவை யாயிருந்த செவந்தியாண்டி சேருவைகாரன் என்பவர் அர்த்த சாமத்தில் பல்லக்குச் சொக்கர் எழுந்தருளி வரும்போது பாத பூசைக் கட்டளைக்காக உய்யக் கொண்டான் கிராமத்தில் குட முறட்டிக் கரையோரம் தென்னந்தோப்பு மாந்தோப்பு முதலாகிய பல விருக்ஷம் வைத்து ஷை தோப்பின் வருமானத்தில் பாத பூசைக் கட்டளை நடப்பி வைத்துக்கொண்டு வருப்படியாக செவ்வந்தியாண்டி சேருவை காரனல் விடப்பட்டது உய்யக் கொண்டான் தோட்டம்.

ஷை மூன்ருவது பட்டம் நமச்சிவாயத் தம்பிரான் சுவாமியவர் கள் பட்டத்தில் நாயக்கரவர்கள் அரண்மனையிலிருந்த கோட்டை கெஸ்த்தி சம்போஜிராவ் என்பவர் வீரேசுரத்தைச் சேர்ந்த படுகை யில் பல விருட்சம் தோப்புகள் வைத்து ஷை தோப்பில் சிவலிங் கம் பிரதிஷ்டை செய்து வைத்து ஷை சுவாமிக்கு அபிஷேக நைவேத்திய முதலிய தெல்லாம் தோட்டத்தின் வருமானத்தில் நடப்பிவைத்துக் கொண்டு வரும்படியாக சம்போஜி ராவால் விடப்பட்டது வீரேசுரம் தோட்டம்.

ஷை பட்டத்தில் சித்திரை உத்ஸவம் ஒன்பதாந் திருநாள் இந்திர விமானம் மண்டகப்படியில் அபிஷேக நைவேத்தியமும் சுவாமி வீதியில் எழுந்தருளி வரவும், சகல சிலவுகளுக்கும் பெரி பிள்ளை யென்பவரால் மருதாண்டாக் குரிச்சிக் கிராமத்தில் நஞ்சை

யில் அஞ்சு முக்காலும் புஞ்சையில் கீழ்ப்படுகை மேல்படுகை தோப்புகள் ரெண்டும் விட்டுக் கொடுந்து ஷை வருமானத்தில் கொண்டு இந்திர விமான மண்டகபடி நடப்பிவைத்துக் கொண்டு வரும்படி பெரிய பிள்ளையால் விடப்பட்டது மருதாண்டக்குரிச்சி.

ஷை பட்டத்தில் சித்திரை உத்ஸவம் பத்தாந் திருநாள் வெள்ளை காத்தி மண்டகப்படிச் சிலவுக்காக இருசப்ப செட்டியார் என்பவர் திருத்தான் தோணியில் தென் கண்டத்தில் நஞ்சையில் செய் எ நிலம் விட்டுக் கொடுத்து ஷை நிலத்தின் வருமானத்தைக் கொண்டு ஷை பத்தாந் திருநாளில் சுவாமி வீதி வலம் வந்து அவரோகணமாகிச் சேத்தி வந்ததின்பேரில் இருசப்ப செட்டியார் மண்டபத்தில் சுவாமியை எழுந்தருளப் பண்ணி அபிஷேக நைவேத்தியமாகி மஞ்சநீராடிக் கொண்டு வீதி சுத்திவந்து கோவிலுக்கு எழுந்தருளி கொடி இறக்கிக் கொண்டு சேத்திக்கு எழுந்தருளும்படிக்கு இருசப்ப செட்டியாரால் விடப்பட்டது திருத்தந்தோணி நஞ்சையில் செய் எ நிலம்.

ஷை பட்டத்தில் திருவாதிரை கட்டளை உபயத்துக்காக சதாசிவ முதலியாரென்பவர் திருத்தாந் தோணியில் வட கண்டத்தில் நஞ்சையில் செய் ரு நிலம் விட்டு, ஷை நில வருமானத்தில் வரப்பட்ட வருமானத்தைக் கொண்டு திருவாதிரையில் அபிஷேக நைவேத்திய முதலாகியதுகளெல்லாம் நடப்பி வைத்துக்கொண்டு வரும்படி சதாசிவ முதலியாரால் விடப்பட்டது திருத்தந்தோணி வட கண்டத்தில் செய் ரு.

ஷை பட்டத்தில் பாலு நாயக்கரென்பவர் சாயரெட்சையில் அபிஷேக நைவேத்தியம் நடப்பிவைத்துக்கொண்டு வரும்படிக்கித் திட்டம் செய்து திருத்தாந்தோணியும் வடகண்டத்தில் நஞ்சை செய் எ நிலம் விட்டுக்கொடுத்து, ஷை நிலத்தில் வரப்பட்ட வருமானத்தில் சாயரெட்சையில் சுவாமி அம்மன் முதலிய........... அபிஷேக நைவேத்தியமும் திருவிளக்கு முதலியதும் போட்டு நடப்பி வைத்துக்கொண்டு வரும்படி ஏற்பட்டது திருத்தாந் தோணி வடகண்டம் செய் எ.

(தொடரும்)

அறிவியற் பகுதி-Science

ஒளிநூல்—(Astronomy)

(திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்)

(முன் சுமடம் பக்கத் தொடர்ச்சி)

இங்ஙனமாக கிரேக்கர் ஒளிநூற்புலமையை வளர்த்திருந்த போது சில மேலைநாட்டு அறிஞரும் அக்கலையை வளர்ப்பதில் முன்வந்தனர். மார்சேல்ஸ்* (Marseilles) நகரத்திய பிதியாஸ் என்பார் தமது ஊர் பூமண்டலத்திலிருக்கும் இடத்தைத் தீர்மானிப்பதற்காக ஓர் சூரிய கடிகாரம் அமைத்து அதன் உதவியால் கோடைக்காலத்தில் ஞாயிற்றின் அதிஉச்ச நிலையை அறிந்தார். இயற்கையின் அமைப்பை நுட்பமாக ஆராயும்பொருட்டு அவர் பூமியின் ஏனைய பகுதிகளுக்கும் சென்றுவந்தார். "ஓர் தீவில் ஞாயிறு மறைந்தவுடன் மறுபடி அது எழுந்தது" என அவர் கூறுகிருர். நார்வே (Norway) யிலும், ஐஸ்லாண்ட் தீவிலும் (Iceland) இந்நிகழ்ச்சி காணப்படுவதால் அவர் அவ்விடங்களுக்குச் சென்றிருந்தவராதல்வேண்டும். பிதியாஸ் என்ற அப்புலவர் திலகர் "வடதுருவமீன் பூமியின் வடக்கு முனைக்கு நேராக இல்லை" என்ற உண்மையைக் கண்டுபிடித்தார். பூமியின் சரிந்த நிலைமையால் அது சற்று விலகியே இருக்கிறது. மேலும், அப்பேரறிஞர் கடலின் அலைகளுக்கும் மதியின் பெயர்ச்சிக்கும் உள்ள ஒருமைப்பாட்டை நுணுகி அறிந்தார்.

பெரியார் அலெக்சாண்டர் மன்னர்தமது வெற்றிகளால் வானூற்கலை வளர்ச்சிக்குப் பேருதவிசெய்தார். அவருடைய ஆசிரியராகிய அரிஸ்டாட்டில் என்ற பேரறிஞர் பல நூல்களை இயற்றினர். அவர் டிகாலோ என்ற நூலில் பூமியின் உருண்டை வடிவத்தை நிலைநாட்டுகிருர். அதற்கு அவர் கூறும் காரணங்கள் பின்வருவன:—1. சந்திரகிரகணத்தில் மதியின்மேல் விழும் பூமியின் நிழல் வட்டவடிவமானது; உருண்டையான பொருள்களே வட்ட நிழலை வீசும். 2. அசையாத விண்மீன்களில் ஒன்றைக்

---

* மார்சேல்ஸ் என்பது பிரான்ஸ் நாட்டின் தென்கோடியிலுள்ள துறைமுகப்பட்டினம்.

குறித்துக்கொண்டு குறித்த இடத்திலிருந்து வடக்கோ தெற்கோ சென்ருல் அம்மீனின் உச்சநிலை மாறுபடுகின்றது. அரிஸ்டாட்டில் எழுதிய எண்ணற்ற நூல்களில் மற்றென்று டிமண்டோ. அதில் அவர் அக்காலத்தில் உலகினரறிந்த ஆசியா, ஆப்பிரிக்கா ஐரோப்பா ஆகிய கண்டங்களைப்பற்றி விவரிக்கிருர்.

கி. மு. 142-ல் *நைஸ் (Nice) நகரத்தில் ஹிப்பார்க்கஸ் என்ற பெரியார் தோன்றினர். அவர் வானூற் கலையை வளர்ப்பதில் அரும்பாடுபட் டிருக்கிருர். அவர் காலத்தில் ஓர் ஆண்டு முந்நூற் றறுபத்தைந்து நாட்களும் ஆறு மணிகளும் அளவாகக் கொண் டிருந்தது. அது கொஞ்சம் குறைவதைக் கண்டு அதை அவர் சரிப்படுத்தினர். ஞாயிறு சூரிய வீதியின் வட பகுதியிலுள்ள ஆறு வீடுகளில் வாழுகிற காலம் தென்பகுதியிலுள்ள ஆறு வீடு களில் வாழ்வதைக் காட்டிலும் அதிகமானது என்பதை அவர் கண்டறிந்தார். இதிலிருந்து அவர் சூரிய வீதியின் ஒழுங்கின் மையை அறிந்தார். அப்பெரியார் இதுபோலவே மதியின் பெயர்ச் சியையுங் கணக்கிட்டுத் தமது குறிப்புக்களை வெளியிட்டார். இந்த உண்மைகளிலிருந்து அவர் இரவி மதிகளின் பெயர்ச்சி களைக் கணக்கிட் டறியச் சுருக்கமான வழிகளை ஏற்படுத்தினர். இதுவரை தெரிந்தமட்டில் அவரே முதன் முதலாக இங்ஙனம் வழிகண்டவர் ஆவார்.

விண்மீன்கள் தம்முள் ஒன்றுக்கொன்றுள்ள இடை வெளியை ஒரு சிறிதும் அணுகாமலும் அகலாமலும் பாதுகாத்து எக்காலத்தும் ஒரே நிலையில் நிற்கின்றன ; ஆனல் அவைகளெல் லாம் ஒரு சேர விண்வட்டத்தில் ஆண்டொன்றுக்கு நாற்பத் தெட்டு விகலை வீதம் அசைகின்றன என்ற உண்மையைக் கண்ட வரும் ஹிப்பார்க்கஸ்தான். பூமியிலிருந்து இரவி மதிகளுக்குள்ள தூரத்தைப் பிசகாமல் கண்டறியும் வழியை அரிஸ்டார்க்கசைக் காட்டிலும் நுட்பமாக நிறுவியவரும் அவரே. அவர் காலத்தில் ஒரு சமயம் ஒரு பெரிய விண்மீன் மறைந்ததாக, உடனே அவர் விண்மீன்களை யெல்லாம் கணக்கிட்டு அவைகளின் உருவங்களையும் தூரங்களையும் குறிக்கும் அட்டவணையைத் தயாரித்தார். பூமியின் வடதென் சம கோடுகளை (Latitude)யும், கீழ்மேல் சமகோடு (Longitude)களையும் பயன்படுத்தி ஊர்களின் நிலைகளைக் குறித்

*நைஸ் என்பது மார்சேல்ஸ் நகருக்குச் சற்றுக் கிழக்கே உள்ளது.

தறியும் வழியையும் அவரே பாவச் செய்தார். அறிஞர் உலக மெல்லாம் இவ்வளவு பெருமை வாய்ந்த அவரை இன்றும் புகழ் கின்றது.

அவருக்குச் சிறிது காலத்தின்பின் வாழ்ந்த புலவர் கிளியோ மீடிஸ் என்பவர். பூமண்டலத்தைப்பற்றியும், கோள்கள் இரவி யைச் சுற்றிவரும் காலத்தைப்பற்றியும், அவைகளின் அளவையும் தூரத்தையும் பற்றியும், பண்டைக்காலக் கிரகணங்களைப்பற்றியும் அவர் ஓர் நூல் இயற்றி யிருக்கிறார். அதில் அவர் தாம் அவை களை யெழுதியது பிதகோராஸ், எராடோஸ்தினிஸ், ஹிப்பார்க்கஸ் என்பவர்களின் நூல்களை ஆதாரவாகக்கொண்டுதான் என்று கூறுகிறார். இந்நூல் மிகவும் பழைமையானதோர் ஆதார நூலாக இருத்தலின் போற்றும் பெருமையது.

இதற்கடுத்து யாவரும் கவனிக்கத்தகுந்த பெரியார் உரோமா னியப் பேரரசாக இருந்த ஜூலியஸ் சீசர் என்பார். அவர் கி. மு. 46-ல் உரோமானியப் பஞ்சாங்கத்திலிருந்த பிழை களையெல்லாம் சீர்ப்படுத்தி அதனைப் புதுப்பித்தார்.

சீசர் சிறந்த ஒளிநூற்புலவர். அவர் தம்முடையகாலத்தில் வழங்கி வந்த பஞ்சாங்கத்தில் மாரிக்கால மாதங்களாகக் குறிக்கப் பெற்றிருந்த காலத்தில் இலையுதிர்காலம் வருவதையும், வசந்தகால மாதங்களாகக் குறிக்கப் பெற்றிருந்த காலத்தில் மாரிக்காலம் வருவதையும் கண்டார். இந்த சீர்கேட்டைச் சரிப்படுத்துவதில் தமக்கு உதவிசெய்யும் பொருட்டு அவர் ஏதேன்ஸ் நகரத்திலிருந்த சாசேன்ஸ் என்ற வானநூற் புலவரை உரோமாபுரிக்கு வரவழைத் தார். அவர் ஓர்ஆண்டினைப் பதினைன்கு மாதங்களுடையதாக ஆக்கிக் காலவேறுபாடு சரிப்படும்வரை நடைபெறுத்தினர். பின் னர் அவர் தாம் கண்ட உண்மைப்படி ஆண்டினை முந்நூற்றறுபத் தைந்து நாட்களும் ஆறுமணிகளும் உடையதாக்கினர். இந்த அளவு அக்கால நிலையில் மிகவும் ஒப்பற்றதாகவே விளங்கிற்று. இம் முறை இன்றும் ஜூலியன்ஆண்டு என்று அவர் பெயரால் புகழப்பெற்று வருகிறது.

எகிப்தில் விளங்குவது அலெக்சாண்டிரியா (Alexandria) மாநகரம். அது சிறந்த வானநூற் புலவர் பலருக்கு வாழ்விடமாக இருந்த பெருமையது. ஹிப்பார்க்கசுக்குச் சிறிதுகாலத்தின் முன்னர் எராடோஸ்தினிஸ் என்ற புலவர் அந்நகரில் வாழ்ந்தார்

பிளேடோ என்ற கலைஞரின் ஆசிரியராகிய அர்ச்சிடாஸ் என்பவரே முதன்முதலாக உலகை அளக்க முயன்று ஒருவாறு வெற்றி பெற்றார். அவருக்குப்பின் செவ்விய முறையில் உலகைக் கிட்டத் தட்டச் சரியாக அளந்தவர் எராடோஸ்தினிஸ்தான். அவர் காலத்தின் பின்னர் எகிப்தில் தக்க வானூற்புலவர் ஒருவரும் தோன்றிலர். அப்பெருங் குறையை நீக்கும் பொருட்டு கி. பி. 140-ல் டாலமி என்ற பெரியார் தோன்றினார்.

டாலமி எகிப்திலுள்ள பெலூசியம் (Pelusium) என்ற நகரைச் சேர்ந்தவர். அவர் கல்வியின்பொருட்டு இளமையிலேயே அலெக்சாண்டிரியாவுக்கு வந்தார். அவர் தம் காலத்திற்கு முற்பட்ட சோதிநூல் ஆராய்ச்சிகளை யெல்லாம் தொகுத்து அவற்றோடு தமது ஆராய்ச்சி முடிவுகளையும் சேர்த்து "பெருந்தோகுதி" என்ற அரிய நூலை இயற்றினார். அவர் பூமியை நடு இடமாகக் கொண்டு இரவி, மதிமுதலிய கோள்களெல்லாம் சுற்றிவருகின்றன என்ற கொள்கையை உடையவர். அக்கொள்கை "டாலமிமுறை" என்று இன்றும் கூறப்பெறுகிறது. அம்முறை கோப்பர்நிக்கஸ் என்ற பெரியார் தோன்றும் வரை நிலைபெற்றிருந்தது.

பெருந்தொகுதி என்றநூல் அரேபியமொழியில் "ஆல்மா ஜேஸ்ட்" என்று சொல்லப்பெறும். அந்நூலை இயற்றியதோடு டாலமி மற்றொருநூலும் எழுதினார். அது பூகோளநூல். அதில் அவர் ஹிப்பார்க்கஸ் முறைப்படி பூமியின் வடதென்சமகோடுகளாலும், கீழ்மேல் சமகோடுகளாலும் ஊர்களின் இருப்பிடத்தைக் குறித்திருக்கிறார். கானேபஸ் நகரிலுள்ள சீராபிஸ் என்ற கோவிலில் வான நூலாராய்ச்சியில் தாம்கண்ட முடிவுகளை யெல்லாம் அவர் சலவைக்கற்களில் பொறித்து வைத்துதவினார். அவரிருந்த காலத்தை நோக்க, உலகத்திலேயே சிறந்தவர் எனப் போற்றத்தகுந்த அறிஞருள் அவரும் ஒருவர் என்பதற்குத் தடையே இல்லை.

(தொடரும்)

மரநூல் (Botany)

[திரு. பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள்]

Leaf என்னும் ஆங்கிலச் சொற்கு இலை என்று பொருள் கூறப்படுகிறது. வழக்காற்றில் இப்பொருள் சரியானதொன்றே யாயினும் மரநூல் வழக்கிற்கு இது சரியாகாது; என்னை, அங்

நூலின்கண் Seed-leaf, Flower-leaf, Foliage-leaf என்னும் வேறுபாடுளதாகலின். இலை என்பது Foliage-leaf என்பதையே குறிக்கும். எனவே மூவகைக்கும் பொருத்தமான ஒரு சொல்லைத் தேடியமைத்தல் வேண்டும். இதழ் என்ற சொல் அத்தகைத்தாம். Lip என்ருலும் இதழ் என்று பொருள்படும்.

Leaf	...	இதழ்
Seed-leaf	...	விதை யிதழ்
Flower-leaf	...	பூவிதழ்
Foliage-leaf	...	தழை யிதழ்

Cotyledon என்னும் சொல் Seed-leaf என்பதையே குறிக்கும். அதற்கு "அங்குராதளம்" என்னும் பொருள் கூறப்பட்டு வருகிறது. அங்குரம் என்னும் வடசொற்கு நேர்பொருள் முளை என்பதாகும்; தளம் என்பதோ இலையெனப் பொருள்படும். எனவே அங்குராதளம் என்ருல் முளை யிலை அல்லது முளை யிதழ் என்ற பொருள் பெறப்படும். முளையிதழ் என்பது Seed-leaf ஆகாது, ஏனெனில் அது விதையைச் சேர்ந்தது என்று குறிக்கவில்லை யாதலின். விதை யிதழ் என்ற சொல்லோ அதை விளக்கமாகக் குறிக்கிறது. பூவிதழ் என்பது பூவையும் தழையிதழ் என்பது தழையையுஞ் சேர்ந்திருப்பதைக் குறிப்பதுங் காண்க. மேலும் இச்சொல் வழக்காற்றிற்கும் எளிதாயுள்ளதென்பதும் தமிழ்மொழிப் போக்கிற்கு முரணுகாதுள்ளதென்பதும் பின்வரும் எடுத்துக் காட்டால் விளங்கும்.

"குன்றிமணி விதையை இதழிதழாக உதிர்த்துக் கல்வின் மீது உறை" என்று கூறுவதைக் "குன்றுமணி அங்குரத்தை இதழிதழாக உதிர்த்துக் கல்லின்மீது உறை" என்று கூறின் பொருள் சிறவாமை காண்க.

Cotyledon	...	விதையிதழ்
Dicotyledonous	...	ஈரிதழ் விதைய
Monocotyledonous	...	ஓரிதழ் விதைய

அங்குராதளம் என்ற சொற்கொண்டு இவ்வாறு பொருளாக்க முயலல் கடினமாகுமன்ருே? அன்றியும் அங்குராதளம் என்ற ஒரு புதுச் சொல்லை நெட்டுருப்பண்ணுவதைவிட Cotyledon என்ற ஆங்கிலச் சொல்லையே கோட்டிலெடன் என்று தமிழ்ப்படுத்திப் பாடஞ்செய்தல் ஒரு தமிழ்மாணவனுக்கு எளிதாகாதோ?

'கடன் வாங்கியும் பட்டினி' என்று தமிழ்ச் சொற்களிருக்க வட சொல்லைக் கடனாக வாங்கியும் பொருள் சிறவாது தவிப்பானேன்!

Radicle என்பதற்குப் பிரதான தண்டின் கீழ்ப்பகுதி யென்றும் வேர் முனை யென்றும் பொருள் கொள்ளலாமோ என்பது. தண்டு என்பது அடிப்பகுதியைக் குறிக்கும். முனை என்பது வேர் சென்று முடியு மிடத்தைக் குறிக்குமே தவிர வேரின் தொடக்கத்தைக் குறிக்காது.

இது கிடக்க; புச்சம், பிரகண்டம், மூலவஹம்' லசுனம், கந்தம், துவக்கு, குப்பிரம், சனம், வல்கலம், பஹித்துவக்கு, விஷமரேகை, பரியாயம், விருந்தம், மிதுனம், பரிஸாஸ்பர்சம், பிருதக்தளி, சித்திரசலபாக்ருதி, கிலாக்ரம், லம்பனம், புடகபலம், பரிணமம் என்பன போன்ற பலசொற்களைப் பலர் வழங்க முயல்கின்றனர். இவ்வாறு பொருள் கூறுவதனால் மாணவர்கள் எவ்வளவுக்கு இந்நூலை யறிந்து கொள்வரென்று எடுத்துக் கூறவும் வேண்டுமோ? இதை யொழித்து முன்னர்க் கூறியாங்கு ஆங்கிலச் சொற்களையே தமிழ்ப்படுத்தி வழங்கினால் ஆங்கிலங்கற்று அந்நூற்களை ஆங்கிலத்திலேயே படிக்கும்போதாவது அவர்களுக்கு நன்குதவும்.

"Food material" என்பதற்கு ஆஹாரப்பொருள் என்று தமிழ்ச்சொல் வகுத்துளார் ஒருசாரார். வடமொழியில் ஒரு பகுதியையும் ஒரு கிரந்த எழுத்தையும் கடன் வாங்கி இடர்ப்படுவானேன்? தமிழ்க்குடியானவர்கள் "இப்பயிரிற்கு ஊட்டம்போதாமல் நன்றாய் விளையவில்லை" யென்று கூறுவதிலுள்ள ஊட்டம் என்பது எதைக் குறிக்கும்? 'food material' என்பதையே யன்றோ?"

"அடுத்த ஆண்டு உரம்போட்டுப் பயிர் செய்ய வேண்டும்" என்றும் அவர்கள் கூறுகிறார்கள். உரம் என்ற சொல் எதைக் குறிக்கிறது? எரு வென்று பொருள்படும் "Food-material" என்பதையே யன்றோ?"

இவ்வாறு ஊட்டம் என்றும் உரம் என்றும் கூறுகிற அக் குடியானவர்கள் "எருத்து மாட்டிற்குத் தீனி வை" என்றும் "கோழி இரைதேடித் திரிகிறது; அதன் இரைப்பையில் ஒன்று மில்லை" என்றுங் கூறுகிறார்கள். இங்கே தீனி என்பதும் இரை என்பதும் ஐயறிவுள்ள விலங்குகள் பறவைகள் முதலியவற்றின்

உணவை முறையே குறிக்கின்றன. இரைப்பை என்பது crop என்பதற்குப் பொருள்.

மக்களிலும் மாக்களுண்டென்று, அஃதாவது ஆறறிவின்றி ஐயறிவே படைத்தவர்கள் உண்டென்று, பண்டைத்தமிழர் நன்கறிந்திருந்தனர். "மாவு மாக்களும் ஐயறிவினவே, பிறவு முளவே அக்கிளைப் பிறப்பே" என்றும் "மக்கள் தாமே ஆறறி வுயிரே பிறவுமுளவே அக்கிளைப் பிறப்பே" என்றும் தொல்காப்பி யங் கூறிற்று.

விலங்கை யொத்துப் பகுத்தறிவில்லா முழுமக்கள் உண்ணும் உணவைத் தீனியென்றே சொல்லப்படுகிறது. "கூலியாட்களுக்கு இது தீனிவேளை" என்பது நோக்குக.

வழக்காற்றில் மேன்மக்கள் அதாவது ஆறறிவும் உண்மை யிற்படைத்த மக்கள் உண்ணும் உணவு "சாப்பாடு" என்று சொல்லப்படுகிறது.—"ஐயா இன்னும் சாப்பிடவில்லை."

தமிழிலேயே நினைத்துத் தமிழிலேயே பேசும் ஒருவர்க்குத் தமிழ்த் தொடர்களும் சொற்களும் முட்டுப்பாடின்றி இயற்கை யாகவே வரும் என்பது எளிதிலுணரப்படும். அதனால் வெள்ளை யர்களிடம் வேலைபார்க்கும் ஒரு ஆதிதிராவிட சமையற்காரன் (பட்லர்) கற்றுத் தேர்ந்த பார்ப்பனரனைய மேற்குல மொழிநூற் பண்டிதர்கள் பலரைவிடச் சிறந்த அறிவாளியென்று துணிந்து கூறலாம். என்னை? செருக்கினாலோ அன்றி உயர்குலப் பிறப்பி னாலோ சரியான சொற்களைத் தேர்ந்து பயன்படுத்தும் ஆற்றல் அவனிடம் மறைக்கப்பட்டிலதாகலின்.

ஆதிதிராவிடனை யொழித்த ஏனைய குல சமையற்காரர்கள் எல்லோரும் "ஐயா சாப்பிடுகிறார்" என்றுதான் கூறுவார்கள். ஆனால் அவனோ "துரை, தீனி தின்னுகிறார்" என்றுதான் கூறு வான். இது அவனது இயற்கையறிவாற் றூண்டப்பட்டுக் கூறப் படுவதாகும். என்னை? வெள்ளையர்கள் குரங்கைப்போல் இரண்டு கைகளாலும் உணவுப் பொருள்களை யெடுத்தும், அப்பொருள் களைப் பற்களால் கடித்தும். கிழித்தும் தின்னுகின்றனராதலின்.

"தொழுதூண் சுவையின் உழுதூணினிது" என்பது முது மொழி. ஊண் அல்லது உணவு என்பது ஆறறிவு படைத்த மக்கள் உண்ணும் பொருள்களைக் குறிக்கும்.

தமிழில் ஏற்ற சொற்கள் இல்லையென்று ஓலமிடும் முதலையனையர் இவற்றை நோக்கி உண்மை யுணர்வாராக. தாமே பொருள்பயந்து வேறுபாடுகள் பலவற்றையும் விளக்கி வழக்காற்றிலும் இத்தகைய தமிழ்ச் சொற்கள் இருக்கும்போது இதா திருத்தமற்ற மொழிச் சொற்களைக் கடன்வாங்கிக் கவலைப்படுவானேன் !

Food material

1. ஊட்டம். (இயற்கையாய் மரஞ்செடி கொடிகட்கு உணவாயமைந்த உணவுப் பொருள்)

2. உரம் (செயற்கையாய் மேற்கண்டவற்றிற்குப் போடப்படும் உணவுப்பொருள்)

3. எரு (பல இடங்களிலுமிருந்து திரட்டிச் சேர்த்துக் கொணர்ந்து போடப்படும் உணவுப் பொருள்)

4. தீனி (ஐயறிவுபடைத்த விலங்குகட்கும் அவைபோன்ற மக்கட்கும் பயன்படும் உணவுப்பொருள்)

5. இரை (ஐயறிவுபடைத்த பறவைகள், ஊர்வன போன்றவற்றிற்கும் அவைபோன்ற மக்கட்கும் பயன்படும் உணவுப் பொருள்.)

6. உணவு (பகுத்தறிவுள்ள திருந்திய மக்கள் உண்ணும் பொருள்கள்)

எனவே Food material என்பது தமிழில் ஊண் அல்லது உணா என்று பொதுப்பொருள் பெற்று வழங்கும். "ஊணற்ற போதே உடலற்றுப்போம்" என்பது நோக்குக. இங்கே உடல் என்பது வளர்தற்குரிய ஆற்றல் படைத்த ஒரு பொருளாய்க் கருதப்பட்டிருப்பதும் ஓர்க. (தொடரும்)

நெருப்பணைக்கும் பொறிகள்

1682-ம் ஆண்டில் முதன்முதலாக நெருப்பணைக்கும் பொறிகளியற்றுந் தொழிற்சாலை நிறுவப்பெற்றது. அதற்கு பீனிக்ஸ் தொழிற்சாலை என்று பெயர். இரண்டடி மூன்றடி பரப்புள்ள நெருப்பையே தோற்குழாய்கள் மூலம் அப்பொழுது அணைக்க முடிந்தது. 1720-ம் ஆண்டில் இப்பொழுது பயன்படும் மூட்டில்லாத பின்னற் குழாய் கண்டு பிடிக்கப்பட்டது. ஒரு நெருப்பணைக்கும் பொறியை முற்காலத்தில் யாராவது இங்கிலாந்திலுள்ள நகரங்களில் வாங்கிப் பரிசளித்துவிட்டால் அவர் உடனே பாராளுமன்றத்தின் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்படுவாராம்.

நகையும் உவகையும்
Wit & Humour

வெறுஞ் சிறு மொழி

சிறு நகை

வளைந்திருப்பது மகளிர் இயற்கை. வளையல் இதற்கு அறி குறியாயிற்று. இளமையின் பண்பு வளைதலன்றோ? மகளிர் என்ஞ் ஞான்றும் இளையவர், எளியவர், இனியவர்.

o o o o o

கணவரைப் பிரிந்த மகளிர் வளை கழன்று விழுமென்று முன் னூலோர் பலருஞ் சாற்றினர். குறளுடையாரும் இதற்கிசைந்து மொழிந்துளார். காப்புக் கத்தன்மை யுண்டோ? காப்பே தலை! காப்பே கடை.

o o o o o

பொன்னகையுங் கன்னகை (கல்நகை)யும் வேண்டா மென்று ஒருபொழுதுஞ் சொல்லமாட்டேன்; புன்னகை வேண்டு மென்கின்றேன். பொன்னகை பெரிதாயினுஞ் சிறிதாயினும் புன்னகைக் கிணையன்று.

o o o o o

அகத்தில் தோன்றி முகத்தில் மிளிரும் நகை யில்லாதவர்கள் காதிலுங் கழுத்திலுங் கையிலும் நகைகளைச் சுமப்பதாற் பெறுவ தென்ன? காதில் ஒளிவிடுங் கல்லி னழகு வெண்பல் வெளிப்படும் அழகை ஒக்குமோ?

o o o o o

மடமகள் முதல் மடத்தலைவர் ஈறாக எல்லோர்க்கும் நகை மிக வேண்டும். மடமகள் முகமலர்ந்து விருந்தோம்பல் வேண்டும். மடத்தலைவர் நகைத்துப் புரமெரித்தான் மரபினராதலால் நகை யின்றி யாது பணி இயற்றல் அவரால் கூடும்?

o o o o o

"மகளிர் நிறைகாக்குங் காப்பே தலை" என்று குறள்வல்லார் கூறினர். மகளிர்க்குக் காப்பு வேண்டுமென்பது அவர் கருத்தா யிற்று. காப்பை அகற்றிவிட்டு வளையல் மாத்திரம் அணிந்து கொள்ளத் தொடங்கிவிட்டார் மாதர்.

சிறுகதைப் பகுதி-Short Stories

அலைகடலளித்த ஆரணங்கு

[சுவாமிக் கண்ணன் எழுதுவது]

ஊழிற் பெருவலியாவுள? யாதொன்று மில்லையன்றே? இன்றேல் ஞாயிற்றையுந் திங்களையும் பாம்பு விழுங்குங் கொல்!—பாம்பும் விழுங்கவில்லை பல்லியும் விழுங்கவில்லை! அலகுசால் அறிவு நூல் கல்லாமை யென்ற "ஆமையே" விழுங்குவதாக நினைக்கச் செய்கிறது. கோட் செலவினால் மறைவுறுவதைப் பாம்பு விழுங்குவதாக இற்றைநாளுங் கருதியிருத்தல் ஏழைமையன்றோ? எது எவ்வாறாயினும் அம்மறைவு நாளிற் கடல் நீராடல் மட்டும் அறிவியற் கொத்ததென்பது தேற்றம்.

*　　　*　　　*

பரிதிமறைவுநாள்—(சூரியகிரகணம்). மக்கள் திரள் திரளாக கடற்கரையில் வந்து குழுமியிருந்தனர். நீராடுவோர் ஒருபுறம்; "தருப்பணம்" செய்வோர் ஒருபுறம். "திடுக்கென" விழித்துத் திகைத்து நிற்போர் ஒருபுறம். ஆ! எத்தனை வகையினர்! எத்துணைத் தொகையினர்! சேய்மை யெங்கும் நீர்ப்பரப்பாயின் அண்மை யெங்கும் மக்கட் பரப்பாகவே தோற்றிற்று.—மறைந்த பரிதி முழுதுந் தோன்றுங் காலவரை குறுகிற்று. கரையிலிருந்த மக்கட் கூட்டம் கடலினுட் படையெடுத்துச் செல்வதுபோல் "திமிதிமி" யென்று நீரிலிறங்கி மேல்வரும் அலைகளிடை அலைவுற்றுநின்றது. எங்கணும் ஒரே கூச்சல்! மக்கட் பேச்சொலியும் அலைகளின் வீச்சொலியும் ஒருபுடை யொத்திருந்தன.

செறிந்த இக்கூச்சலிடை "ஐயோ! ஆ!" என்ற கூக்குரல் ஒன்று ஒரு பகுதியில் கடலினுட் சிறிது தொலைவிற் கேட்டது போலிருந்தது அங்கு ஈண்டியிருந்த மக்களை விலக்கித் தள்ளிக்கொண்டு கட்டிளங்காளை யொருவன் கடலினுட் பாய்ந்து கூக்குரல் வந்த இடம் நோக்கி விரைவாக நீந்திச் சென்றான். அவன் விலக்கித் தள்ளியதும் பாய்ந்ததும் நீந்திச் சென்றதும் மின்னலை யொத்த விரைவோடு கூடியனவாயிருந்ததால் குழுமியிருந்த ஏனையோர்

என்ன நடக்கிறது என்பதை யுய்த்துணரவும் இயலாமல் திகைப் பூண்டு மிதித்தோர்கள்போற் செயலற்று நின்றிருந்தனர். மறுபடி யும் “ஆ! ஆ!” என்ற திணறலோசை கேட்டது. அடர்ந்த கருங் கூந்தலோடு கூடிய ஒரு தலை சற்றுத் தொலைவில் நீரின்மேற் கிளம்பி வந்து மறுபடியும் அழுந்திற்று. பாய்ந்து சென்ற சிறுவனுக்கும் அத்தலை தோன்றிமறைந்த இடத்திற்கு மிடையில் இன்னும் பத்துப் பதினைந்தடி தொலைதான் இருந்தது. மறுநொடியில், நீராவிப் படகொன்று நிமிர்ந்து தாவிச் செல்வது போன்று சிறுவன் இரண்டு தாவலில் குறித்த இடத்தை அணுகினான். அணுகியவன் சட்டென நீரினுண் மூழ்கிச் சிறிது நேரத்தில் தன் இடக்கை முழுதும் கூந்தலைச் சுற்றிக் கொண்டவனாய் ஒரு பெண்ணின் தலையை நீர்மட்டத்திற்கு மேல் தூக்கியவண்ணம் வெளிவந்தான்.

* * *

“யாராவது உடனே ஓடிச்சென்று அதோதெரியும் வண்டியின் சக்கரங்களி லொன்றைக் கழற்றித் தூக்கிவாருங்கள்! நொடியில் வரவேண்டும்! உங்களுக்குப் புண்ணியமாப் போகிறது” என்று கூவிக் கொண்டே சிறுவன் பெண்ணின் உடலை நேர்மையாகத் தாங்கிய வண்ணம் கரைசேர்ந்தான். சிறிது நேரத்தில் வண்டிச் சக்கரம் ஒன்றும் கொண்டுவரப்பட்டது. தூக்கிவந்த பெண்ணை அச்சக்கரத்தின்மீது கிடத்தியபின், சக்கரத்தைக் குயவனொருவன் மட்பாண்டஞ்செய்யத் தன் சக்கரத்தைச் சுற்றுவதுபோல் சிறுவன் விரைவாகச் சுற்றினான். சுற்றச் சுற்ற சக்கரத்தின் மேலிருந்த பெண்ணின் வாய்வழியும் மூக்குவழியும் “குபு குபு” வென்று நீர் வெளிவந்தது. அசைவற்றிருந்த அவள் கைகால்கள் அசைவுற்றன. இறுதியில் “உம்” என்ற ஓசையுடன் ஒரு பெருமூச்சுவிட்டு அப்பெண் மறுபடியுஞ் சோர்வுற்றாள். மங்கியிருந்த சிறுவனின் முகத்தில் ஒளிவிசிற்று; தான் காப்பாற்றிய பெண் உயிருடனிருக்கிறாள் என்பதை அவன் கண்டுகொண்டதாக அவன்முகம் அறிவித்தது. “ஐயன்மீர்! இனி அருள் கூர்ந்து சற்று விலகி நில்லுங்கள்! நன்றாக அப்பெண்மீது காற்று வீச வேண்டும். நான் இவ்வாறு கூறுவதற்கு மன்னித்துக் கொள்ளுங்கள்” என்று அங்குச் சூழ்ந்து நின்ற திரளான மக்களைப் பணிவுடன் வேண்டிக் கொண்டான் சிறுவன்.

* * *

"செந்திஞுக், நேற்று உன் பெயர் செய்தித்தாளில் அடிபட்டதே, நிகழ்ந்ததென்ன?'' என்ருன் வடிவேலன்.

"வடிவேல், உன்னிடங் கூருமல் நான் வேறு யாரிடங் கூறப் போகிறேன்! நேற்று விடுமுறை நாளா யிருந்தமையால் நானும் கடற்கரைக்குச் சென்று திரள் திரளாக மக்கள் குழுமி யிருக்குங் காட்சியைக் கண்டு களிக்கலாமென எண்ணிச் சென்றேன். எண்ணியதற் கேற்றவாறு எண்ணற்ற மக்களைக் கண்டு மகிழ்ந்தேன். கடற்கரை யோரமே வடமுகமாக நான் சென்றுகொண்டிருக்கையில் இருப்புப் பாலத் தருகில் நாலைந்து இளம்பெண்கள் நீராட வந்திருந்ததைக் கண்டேன். அப்பெண்கள் யாவரும் நம் மினத்தவராய பார்ப்பனப் பெண்களே. அவர்களில் ஒருத்தி மட்டும் நான் என்றுங் கண்டிராத பேரழகு படைத்த பதின் மூன்று பதினன்கு வயதுள்ள ஆரணங்கெனத் தோற்றினுள். மற்றவர்களும் அழகு வாய்ந்தவர்களாயினும் அவர்களிடை அவள் நின்றிருந்தது தாரகை நடுவண் தண்மதி யமைந்ததை யொத்திருந்தது. மருத்துவக் கல்லூரியிலும் அரசாங்க மருத்துச்சாலையிலும் கணக்கற்ற கட்டிளங் காரிகைகளை நாடோறுங் கண்டுங் கலங்காதிருந்த என் மனம் அவளை அங்குக் கண்ட அக்கணமே நிலை தளர்ந்துவிட்டது. மேலே சென்று காண எண்ணியிருந்த எண்ணம் இருந்தவிடந் தெரியாமற் பறந்து போயிற்று. கால்கள் நின்ற இடத்திலேயே வேரூன்றி விட்டன. அந்நங்கையர் நின்றிருந்த இடத்தின் அருகாமையில் இன்னும் நூற்றுக்கணக்கான மக்கள் இருந்தார்களென்பதும் அவர்களில் யாரேனும் நான் அவ்வாறு நெஞ்சு பறிகொடுத்து நிற்பதைப் பார்த்தால் என்ன நினைப்பார்கள் என்பதும் என் புத்திக் கெட்டவில்லை. இந்நிலையில், அப்பெண்கள் நீரிலிறங்கி முழுகினர்கள். ஒரு பெரிய அலைவந்து மோதிற்று. மூலைக்கொருவராய் உருண்டு புரண்டு எழுந்தார்கள். மதியனைய அம்மங்கைநல்லாளைமட்டும் காணவில்லை. சற்றுநேரங் கழிந்ததும் கரையிலிருந்து நாற்பதைம்பது அடித் தொலைவில் "ஐயோ! ஆ!'' என்ற பெண்குரல் ஒன்று நீரிடையிருந்து எழுந்தது. உண்மை யுணர்ந்தேன். வந்து மோதிய பேரலை கவர்ந்து சென்றுவிட்டது கட்டழகியை. அவ்வளவுதான். அதன்பின் நான் திடுதிடென ஓடியதும், மக்களை விலக்கிக்கொண்டு நீரிற் குதித்து நீந்திச் சென்றதும், மங்கையை யணுகி அவள் தலை

மயிரைக் கையிற் சுற்றிக்கொண்டு கரையருகே வந்ததும் எப்படி நடந்தன வென்று என்னாற் கூறுவதற்கில்லை. எல்லாம் என்னை யறியாமலே பொறி யியக்கத்தினால் நடைபெறுவதுபோன்று நடைபெற்றது. கரை நெருங்கியதும் அப்பெண்ணைத் தூக்கிக் கொண்டுவந்து ஒரு வண்டிச் சக்கரத்தின்மீது வைத்துச் சுற்றினேன். நீரில் மூழ்கினோர் நீரைக் குடித்திருந்தால் அந்நீரை வெளிப்படுத்துவதற்கு இதுவே ஏற்றவழியென்று கேட்டிருக்கிறேன்.......''

வடிவேலன்:—"இதெல்லாம் செய்தித்தாளிற் கண்டேன். இங்கு நீ விரிவாகக் கூறவேண்டாம். அப்பெண்ணுக்குத் தன்னறிவு வந்தபின் என்ன நிகழ்ந்தது?''

(தொடரும்)

* * * *

புதுக்கவிகள்-Original Poetry

ஆறு

(திருவாளர் S. தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் பாடியது.)

கும்மி

கல்லும் மலையுங் குதித்து வந்தேன்—பெருங்
காடும் செடியும் கடந்து வந்தேன்.
எல்லை விரிந்த சமவெளி யெங்கும்—நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன். 1

கட்டும் அணையேறிச் சாடி வந்தேன்—அதன்
கண்ணறை தோறும் நுழைந்து வந்தேன்.
திட்டுத் திடர்களும் சுற்றிவந்தேன்—மடைச்
சிப்புகள் மோதித் திறந்து வந்தேன். 2

காயும் நிழத்தழல் ஆற்றி வந்தேன்—அதில்
கண்குளிரப் பயிர் கண்டு வந்தேன்
ஆயும் மலர்ப்பொழில் செய்துவந்தேன்—அங்கென்
ஆசைதீர விளை யாடி வந்தேன். 3

ஏறாத மேடுகள் ஏறி வந்தேன்—பல
ஏரி குளங்கள் நிரப்பி வந்தேன்.
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன்—மணல்
ஓடைகள் பொங்கிட ஓடி வந்தேன். 4

ஆயிரம் காலால் நடந்து வந்தேன்—நன்செய்
அத்தனையும் சுற்றிப் பார்த்து வந்தேன்.
நேயமுறப் புன்செய்க் காட்டினிலும்—அங்கங்கு
நீரை இறைத்து நெடுக வந்தேன். 5

பஞ்சை யரைத்து நூல் நூற்றுவந்தேன்—சீனி
பாகமாய்ச் செய்து கொடுத்து வந்தேன்.
நெஞ்சம் உலர்ந்த நெடுநகரிற்—குழாய்
நீராகவும் சென்று பாய்ந்து வந்தேன். 6

மாங்கனி தேங்கனி வாரி வந்தேன்—நல்ல
வாச மலர்களும் அள்ளி வந்தேன்
தீங்கரும் பாயிரம் தள்ளி வந்தேன்—மிகத்
தேனும் தினையுமே சேர்த்து வந்தேன். 7

அல்லும் பகலும் அலைந்து வந்தேன்—எங்கள்
ஆழி இறைவனைக் காண வந்தேன்
நில்லும், எனக்கினி நேரமில்லை—இன்னும்
நீண்ட வழிபோக வேண்டுமம்மா! 8

நிலக்குப் பொறை

கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோலது வல்ல
தில்லை நிலக்குப் பொறை. குறள் 570

கண்ணோட்டத் துள்ள துலகியல் அஃதிலா
ருண்மை நிலக்குப் பொறை. குறள் 572

ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை. குறள் 1003

அறநூல் கல்லாதவர்களைத் தனக்கு அமைச்சர்களாக அமைத்துக் கொண்ட கொடுங்கோல் மன்னனும், கண்ணோட்ட(தாட்சண்யம்) மில்லாத மாந்தர்களும், பொருளையே விரும்பிப் புகழை விரும்பாதவர்களுமே பூமிக்குப் பாரமென்பார் நமது வள்ளுவப் பெருந்தகையார்.

குறிப்பு

தென்னிந்திய சைவசித்தாந்த சங்கம், திருநெல்வேலி

10-9-33 ஞாயிற்றுக்கிழமை மாலே 6-மணிக்கும், 16-9-33 சனிக்கிழமை மாலே 6-மணிக்கும், திருநெல்வேலி நெல்லேயப்பர் கோவில் வசந்தமண்டபத்தில் திருவாலங்காடு உயர்திரு. சச்சிதானந்த யோகி யவர்கள் "ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள்" என்னும் பொருள்பற்றிப் பக்கவாத்தியங்களுடன் கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய் அரிய விரிவுரை நிகழ்த்தினர்கள். அவ்வமயம் எண்ணிறந்த தமிழ்மெய்யன்பர்கள் வந்து கேட்டு இன்புற்றூர்கள்.

சைவ சித்தாந்த சபை, தூத்துக்குடி

தமிழ் நாட்டிலுள்ள சைவசித்தாந்த சபைகளில் முதன் முதல் தோன்றியது இதுவேயாகும். இதற்கு இவ்வாண்டோடு ஐம்பதாவது ஆண்டு நிரம்புகின்றது. இதற்கு நாளே டிசம்பர்த் திங்களில் 'பொன்விழா' நடத்தவும், பெரியார் திருவுருவப் படங்களுடன் 'பொன் மலர்' ஒன்று அச்சிட்டு வெளியிடவும் தீர்மானித்திருப்பதாக இச்சபையின் அமைச்சரும் சித்தாந்த ஆசிரியருமான திருவாளர். ந. சிவகுருநாதபிள்ளே யவர்கள் எழுதியுள்ளார்கள். இதன் பொன்விழாவின்பொருட்டுச் சைவ நன்மக்கள் தங்கள் தங்களாலியன்றபொருளே இதன் அமைச்சரவர்கட்கு அனுப்புவார்களாக.

மதிப்புரை

அருணகிரிநாதர் அருளிச்செய்த திருமுறைத்திரட்டு

இது காஞ்சி ஸ்ரீ நாகலிங்க முனிவர் அவர்களாற் புதிய முறையில் தொகுக்கப்பெற்றது. பாராயணத்துக்கும் வழிபாட்டுக்கும் பெரிதும் பயன்படுவது. திருவாளர். கா. நமச்சிவாய முதலியாரவர்கள் எழுதிய முன்னுரையுடையது. உயர்ந்த காகிதத்தில் அச்சிடப்பெற்றுக் கலிக்காக் கட்டிடம் பெற்றுள்ளது. 408 பக்கம் விலே குறைந்த ரூ. 2.

இது ஷெ பதிப்பாசிரியரிடத்திலும் நமது கழகத்திலும் விலேக்குக் கிடைக்கும்.



திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்டதேவர் கோயில்